

# இலங்கையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

சிவில் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய ஒன்றியம்

# இலங்கையில் 'அரசசார்பற்ற அமைப்புகளின் சட்டங்களும் இணைவதற்கான சுதந்திரமும்

## பிரச்சினை

இலங்கையில் காலத்திற்கு காலம், சிவில் சமூக குழுக்களினதும் அமைப்புகளினதும் நடவடிக்கைகளினை பதிவுசெய்ய, கண்காணிக்க, நடவடிக்கைகளை நெறிப்படுத்த மற்றும் தலையீடுசெய்யவென முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. வேறுபட்ட காரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன: அரசசார்பற்ற அமைப்புகள் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதில் ஈடுபட்டுள்ளன', சில அரசசார்பற்ற அமைப்புகள் மக்களை ஏமாற்றியுள்ளன', அரசசார்பற்ற அமைப்புகள் வெளிநாட்டினால் நிதியளிக்கப்பட்டு அழிவுதரும் நோக்கங்களைக் கொண்டுள்ளன', சில அரசசார்பற்ற அமைப்புகள் தம்மைத் தாமே வழிநடத்தமுடியாதவை. ஆட்சியிலுள்ள அரசாங்கங்கள் பின்பற்றும் ஒரு தந்திரோபாயம், இந்த குற்றச்சாட்டுகள் அனைத்திற்கும் பதிலளிக்கும் சாட்டாக, 'அரசசார்பற்ற அமைப்புகளிற்கான சட்டம்' ஒன்றினை அறிமுகப்படுத்த முயற்சிப்பது.

தன்னார்வ சமூக சேவைகள் அமைப்புகளின் சட்டம் (VSSO) மற்றும் அரசசார்பற்ற அமைப்புகளுக்கான செயலகத்தின் முறைமைகள் போன்ற தற்போதுள்ள 'அரசசார்பற்ற அமைப்புகளிற்கான சட்டத்தின்' கீழ், பதிவுசெய்யப்பட்ட அமைப்புகள் பல சிரமங்களைக் கொண்டுள்ளன. நடவடிக்கைகளுக்கான வருடாந்த அனுமதியைப் பெறுவதற்காக வேண்டுவன, அதிகாரத்தினை பயன்படுத்தும் அதிகாரிகளை உருவாக்குகின்றது. சில அதிகாரிகள் நடவடிக்கைகளுக்கான அனுமதியினை காரணங்களின்றி மறுத்துள்ளனர், சிலர் மோசடியான நடைமுறைகளை வெளிக்காட்டுகின்றனர், சிலர் நிறுவனங்களை அவர்களது நடவடிக்கைகளை மாற்றுமாறு வற்புறுத்துகின்றனர், அவர்கள் கல்வெட்டுகளை அமைக்கவேண்டும் எனவும் சிவிலியன்களை வலுவூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது எனவும் நிறுவனங்களுக்கு குறிப்பிட்டுள்ளதுடன் சிலர் சிறிய நிறுவனங்களை விமர்சித்து பயமுறுத்தியுள்ளனர். பதிவும் கண்காணிப்பும் விசாரணைகளிலும் தொந்தரவுகளிலும் சிலநேரங்களிலும் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் பயமுறுத்தல்களிலும் முடிந்துள்ளது. நிறுவனங்கள் அரச வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களுடன் பணியாற்றும் போது இது இன்னமும் பயமுறுத்துவதாக உள்ளது.

## 2011 மற்றும் 2018 அரச திட்டமுன்மொழிவுகள் நாடுவது:

- உள்ளக நிர்வாகத்துடன் தலையிடல். அரசசார்பற்ற அமைப்புகளின் செயலகமானது நிறுவனங்களின் முகாமைத்துவத்தினைப் பொறுப்பெடுத்து உள்ளக கூட்டங்களில் பங்குபற்றும் அதிகாரத்தினை கொண்டுள்ளது. சேவைகளை மீளாய்வுசெய்யும் அதிகாரத்தினை அறிமுகப்படுத்த முயற்சிக்கப்பட்டது.

- நிதிக் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தல். பணியாளர் நாயகத்தின் அனுமதியின்றி ஒரு அரசசார்பற்ற அமைப்பானது இன்னுமொரு அரசசார்பற்ற அமைப்பிற்கு நிதியளிப்பதனை தடைசெய்தல், பொதுமக்களிடமிருந்து 1 மில்லியனுக்கு மேலான நிதியினை கோருவதற்கான அனுமதிக்கான கோரிக்கை.

- அரசசார்பற்ற அமைப்புகளின் செயலகத்திற்கு தேடிப்பிடிக்கும் பொலிஸ் அதிகாரத்தினை அறிமுகப்படுத்தல்.

- வங்கிக் கணக்குகளை கண்காணிக்கும் பரந்தளவிலான அதிகாரத்தினை அறிமுகப்படுத்தல். நியாயப்படுத்தல் இன்றி வங்கித் தகவல்களை பெறும் அதிகாரம் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் கணக்குகளுக்கு 1 மில்லியனுக்கு மேலான அனைத்து வைப்புகள் பற்றியும் செயலகத்திற்கு அறிவிக்குமாறு வங்கிகளை வேண்டுதல்.

## பரந்த விரிவான தாக்கம்

சிவில் சமூக அமைப்புகளிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட நடவடிக்கைகளிலும் ஒரு சந்தேக கலாசாரத்தினை பின்பற்றுதலானது முழுமையான மேற்பார்வையினையும் தலையீட்டினையும் நியாயப்படுத்த உதவுகின்றது.

'ஒரு அளவானது அனைத்திற்கும் பொருத்தம்' என்ற ஓரு சட்டமானது சிவில் சமூக அமைப்புகளின் பல்வகைமையினை அங்கீகரிக்கத் தவறுவதுடன் முறைசாராத, சிறிய ஒழுங்குபடுத்தும் முயற்சிகளில் நடைமுறைக்குச் சாத்தியமற்ற சட்டங்களை விளைவாக்குகின்றது.

அரச முகவர்கள் மற்றும் அதிகாரிகளினாலான வரையறுக்கும், ஊழல் மற்றும் தொந்தரவூட்டும் நடைமுறைகளின் இணைப்பிற்குப் பதிலளிக்க தவறுதல்.

அதிகாரிகளினாலான தீர்மானத்தின் துஸ்பிரயோகத்திற்கான வாய்ப்புகளை அதிகரித்தல்.

காலம்கடந்த சட்டங்களால் (LGBTIQ உரிமைகள், கருக்கலைப்பு உள்ளிட்ட பெண்களின் உரிமைகள் போன்றன) குற்றவியல் எனக் கருதப்படும் விடயங்களில், கற்பிக்கும் ஒரு முயற்சியிலும் மாற்றங்களை கோருவதற்கும் பிரஜைகள் பணியாற்றுகின்றனர் என்பதனை அங்கீகரிக்கத் தவறுதல். இந்த அதிகளவில் முறைசாராத குழுக்களை கண்காணித்தலானது அவர்களை ஆபத்திற்கு இட்டுச்செல்கின்றது.

## கூடுவதற்கான சுதந்திரம்

n கூடுவதற்கான சுதந்திரம் என்பது ஒரு முறைசார் அல்லது முறைசாராத குழு ஒன்றினை உருவாக்குவதற்கும்/அல்லது இணைவதற்குமான உரிமை. இந்த உரிமையானது சர்வதேச மனித உரிமைகள் உறுப்புகளில், சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் (Art. 20), சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உறுப்புரிமை (“ICCPR”), பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச உறுப்புரிமை (“ICESCR”) என்பவற்றில் பாதுகாக்கப்பட்டுள்ளது.

கூடுவதற்கான சுதந்திரம் என்பது, இலங்கை யாப்பின் பகுதி 14(1)(c) இல் பாதுகாக்கப்பட்டுள்ளதுடன் பகுதி 14(1)(d) இல் ஒரு வர்த்தக சங்கத்தினை உருவாக்கவும் இணையவுமான சுதந்திரத்தினை அங்கீகரிக்கின்றது.

வரலாற்றுரீதியாக பிரஜைகள், சமூகத்திற்கு நன்மை பயக்கும் என தாம் நம்புகின்ற எண்ணங்களையும் நடைமுறைகளையும் பணியாற்றுவதற்கும் முன்னேற்றுவதற்கும் ஒன்றாக வருகின்றனர் - அசமத்துவ நிலைக்குப் பதிலளித்தல், வறுமையினைக் குறைத்தல், சமாதானத்தினையும் நல்லிணக்கத்தினையும், சமூக ஒற்றுமையினையும் மேம்படுத்தல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாத்தல்.

மேலே விபரிக்கப்பட்டுள்ள பிரச்சினைகள், சமூக மாற்றத்திற்கான ஒழுங்குபடுத்தப்பட்ட நடவடிக்கைகளை தடைசெய்கின்றது. சமூக மாற்ற நடவடிக்கைகள் சில வேளைகளில், அரச கொள்கைகளில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டுவதுடன் அதிகாரிகள் நியாயமற்ற அல்லது சட்டரீதியற்ற விதத்தில் செயற்பட்டால் முறைப்பாடுகளைச் செய்வதற்கும் உரிமைகள் மற்றும் பாதுகாப்புகளுக்கான கிளர்ச்சிகளை சம்பந்தப்படுத்துகின்றது, உடன்டிபாடின்மையை ஏற்றுக்கொள்ளலும் பாதுகாத்தலும் நம்பிக்கையினையும் வலுவான ஜனநாயகத்தினையும் கட்டியெழுப்புகின்றது.

## சிவில் சமூகமானது கூடுவதற்கான சுதந்திரத்தினை சமூகப் பணிக்காகப் பயன்படுத்துகின்றது

சமூகப் பணிகளில் ஈடுபடும் பல சிவில் சமூக குழுக்கள் உள்ளன. சிவில் சமூகம் என்பது சமூக குழுக்கள், அரச சார்பற்ற அமைப்புகள், தொழிற்சங்கங்கள், சுதேசிக் குழுக்கள், நலன்புரி அமைப்புகள், சமயரீதியான அல்லது நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகள், தொழில்வாண்மை அமைப்புகள், ஆய்வு மற்றும் விழிப்புணர்வூட்டும் குழுக்கள் மற்றும் நிலையங்கள் போன்றவற்றினைக் குறிக்கும்.

இலங்கையிலுள்ள சில உதாரணங்களானவை கோவில் அபிவிருத்தி சபைகள், விவசாய சங்கங்கள், மரண ஆதார சங்கங்கள், வாக்களிப்பதற்கான உரிமைக்கான இயக்கத்திலான முன்னய உதாரணங்களுடன் பெண்கள் அமைப்புகள், கூட்டுறவுகள், கிராமமட்ட சுய-உதவிக் குழுக்கள் போன்ற சமூக மட்ட அமைப்புகள், மற்றும் கலை, சமூகக்கூட்டுப் பொறுப்புப் பணிகளை முன்னேற்றுவதில் ஈடுபடும் தனியார் அமைப்புகள் கூட. ‘இயக்கம்’ என்ற பதத்தினை பாவிப்பதனால், சட்டமானது பெண்கள் உரிமைகள், காணி உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் போன்று பொதுவான குறிக்கோள்களை நோக்கிப் பணியாற்றும் பரந்த கூட்டு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த முனைகின்றது.

# தற்போதுள்ள ஒழுங்குபடுதலுக்கான சட்ட முறை

## மக்களும் குழுக்களும் கூடுவதற்கு சுதந்திரமானவர்கள்



பிரஜைகளினால் **முறைசாரா வகையில் கூடுதல்** என்பது கடற்கரையினை துப்பரவாக்குதல், தானம் அல்லது உணவு விநியோகம், மீள்சுழற்சிப் பிரசாரங்கள் போன்ற எழுந்தவாரியான சிரமதான இயக்கத்தில் இருந்து எதனையும் உள்ளடக்கலாம். பிரஜைகள், தேசிய அனர்த்தங்களுக்கான உதவி மற்றும் நிவாரண முயற்சிகள், சமாதானத்தினையும் நல்லிணக்கத்தினையும் மேம்படுத்தல், சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களை ஆதரவளித்தல், பெண்களுக்கு எதிரான வன்முறை போன்ற பரந்துபட்ட முன்னெடுப்புகளுக்காக முறைசாராத குழுக்கள் அல்லது வலையமைப்புகளையும் உருவாக்குகின்றனர்.



**முறைசார் ஒழுங்குபடுத்தல்** என்பது குழுவினது கட்டமைப்பு மற்றும் குறிக்கோள்கள் என்பவற்றினைப் பொறுத்து தன்னார்வ சமூக சேவைகள் அமைப்புச் (பதிவும் மேற்பார்வையும்) சட்டத்தின் கீழ் இல. 31 of 1980, சமூக கட்டளைகள்சட்டம், கூட்டுறவுச் சங்கங்களின் கட்டளைகள் சட்டம், ஒரு அனுமதிக்கப்பட்ட நலன்புரியமைப்பாக, வர்த்தன சங்க கட்டளைகள் சட்டம், கம்பனிகள் சட்டம், நம்பிக்கைகள் கட்டளைகள் சட்டம், அல்லது Wakf சட்டம் மற்றும் பாராளுமன்றச் சட்டத்தினால் உள்ளடக்கப்பட்டதில் பதிவினை உள்ளடக்கலாம். இந்த முறைசார் பதிவுச்செயல்முறைகள் ஒவ்வொன்றும் தமக்கே உரித்தான சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் அவசியப்படுத்துகின்றன.

## ஏமாற்றுதல், பயங்கரவாதத்திற்கு நிதியிடல் மற்றும் அரச விடயங்களுக்கு பதிலளிக்க நிறுவனத்திற்கு உள்ளேயே சட்டங்கள் உள்ளன

குற்றவியல் நடத்தைகளை விசாரிக்கவும் தண்டிக்கவும் ஏற்கனவே சட்டங்கள் உள்ளன. இந்தச் சட்டங்கள், தனிப்பட்டவர்கள், முறைசாராத குழுக்களினுள்ளே தனிப்பட்டவர்கள், முறைசாராத குழுக்கள், அமைப்புகள், கம்பனிகள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதியப்படாத வேறு வடிவிலான அரச சார்பற்ற அமைப்புகள் என்பவற்றிற்கும் பொருந்தும்.

ஏமாற்றுதல் மற்றும் களவு போன்ற குற்றங்களை குற்றவியல் சட்டக்கோவை கையாளுகின்றது. பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் பற்றிய அடக்குமுறை தொடர்பான உடன்படிக்கை Act No. 25 of 2005, நிதியியல் பரிமாற்ற அறிக்கையிடல் சட்டம Act No. 6 of 2006 , நிதியியல் கொடுக்கல் வாங்கல்களை கண்காணிக்கும் பணச்சலவைத் தடுப்பு No. 5 of 2006. குற்றவியல் விசாரணைத் திணைக்களம், நிதிக் குற்றங்களின் விசாரணைப் பிரிவு மற்றும் பொலிஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவு, மத்திய வங்கியினுள்ளேயான நிதிப் புலன் விசாரணைப் பிரிவு போன்றன இந்த குறிப்பான குற்றங்களை விசாரிப்பதில் நிபுணத்துவம் பெற்றுள்ள விசேட அரச முகவர்களும் உள்ளனர்.

ஆட்சி தொடர்பான முறைசார் அமைப்புகளுக்கு உள்ளேயான பிரச்சினைகள் மற்றும் பிணக்குகள் நிறுவத்தின் யாப்பிற்கு அமைவாக கையாளப்படல் வேண்டும். யாராவது நபரினால் ஏற்படுத்தப்பட்ட இழப்பிற்கு, நட்டஈடு மற்றும் நிவாரணம் பெறுவதற்கு சிவில் சட்டங்களில் பரிகாரங்கள் உள்ளன. இது எந்த நபரும் அல்லது கூட்டுறவு அமைப்பும் கீழ்ப்படிய வேண்டியதொன்றாகும். அதுவே அரசசார்பற்ற அமைப்புகளும் கீழ்ப்படியவேண்டியதாகும். ஆகையால் ஒரு விசேடமான அரச சார்பற்ற அமைப்பு சட்டமானது நியாயப்படுத்தப்பட முடியாது.

## சிவில் சமூகம் தொடர்பாக அரசின் பங்கு என்னவாக இருத்தல் வேண்டும்?

அரசினதுகடப்பாடு இரண்டுவகைப்பட்டது

எதிர்மறையானகடப்பாடு - கூடுவதற்கானசுதந்திரத்தில் தலையிடாமல் இருத்தல்

- நேர்வகையானகடப்பாடு - கூடுவதற்கான சுதந்திரத்தினை அனுபவிப்பதனை இலகுபடுத்தல். இதுசிவில் சமூக அமைப்புகள் தமதுபணிகளின் ஈடுபடுவதற்கு ஏதுவான ஒரு சூழலை உருவாக்குவதில் முதலீடுசெய்வதனை கருதும்.

ஒன்றாக இணையவும் அமைப்புகளை உருவாக்கவும் விரும்பும் தனிப்பட்டவர்களை அவ்வாறு சுதந்திரமாகச் செய்வதற்கு ஒட்டுமொத்த சமூக, சட்ட மற்றும் அரசியல் சட்டகங்கள் அனுமதிக்கின்றன என்பதனை நிச்சயப்படுத்தும் அளவீடுகளை அரசு நிச்சயப்படுத்தவேண்டும்.

அரச அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகளுடன் பணியாற்றலாம் ஆனால் சிவில் சமூக அமைப்புகளை அவர்களுடைய நடவடிக்கைகளில் கட்டுப்படுத்தவோ அல்லது நெறிப்படுத்தவோ முடியாது. அடிப்பயையாக, அரச- சிவில் சமூக இடைத்தொடர்பானது துறையினது சுதந்திரத்தினை மதிக்கவேண்டும். சட்ட மறுசீரமைப்பானது நேர்வகையான ஈடுபாட்டினையும் தொடர்ச்சியான தன்மையினையும் ஊக்கப்படுத்த வேண்டும். சட்ட மறுசீரமைப்பானது தற்போதுள்ள குற்றவியல் சட்டம் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் போன்ற சட்ட சட்டகத்தினை பயன்படுத்த வேண்டும். அத்துடன் அவசியமற்றதும் நியாயப்படுத்த முடியாததுமான மேலதிக சட்டச் சுமைகளை உருவாக்கக் கூடாது.

### சிவில் சமூகத்துடன் இலங்கை அரசினது ஈடுபாட்டிற்கான பின்வரும் வழிகாட்டும் கொள்கைகளை முன்னேற்றுவோம்

- கூடுவதற்கான சுதந்திரம்
- அரசசார்பற்றஅமைப்புகளின் சமமானபாவனையும் பாரபட்சமற்றதன்மையும்
- கருத்துச் சுதந்திரம்
- அமைப்புகளின் விழுமியங்கள்,திட்டங்கள் மற்றும் பணியாற்றும் முறைமைகள் பற்றிவரையறுத்துதீர்மானிக்கும் சுதந்திரம் (சுய-ஆட்சி)
- தொடர்பாடலுக்கும் கூட்டுறவிற்குமானஉரிமை
- சிவில் சமூகஅமைப்புகளுக்கானஒரு இயலுமைப்படுத்தும் சூழலைபாதுகாப்பதும் வழங்குவதும் அரசின் கடமையாகும்.

# அரசசார்பற்றஅமைப்புகளின் சட்டங்கள் தொடர்பாகசிவில் சமூகத்துடனான் கலந்தாராய்வின் கண்டுபிடிப்புகளும் தன்னார்வ சமூக சேவை அமைப்புகள் சட்டத்திற்கு முன்மொழியப்பட்ட திருத்தங்களும்

# 2019

## பின்னணி

### தன்னார்வ சமூக சேவை அமைப்புகளைப் பற்றிய சட்டத்திற்கான (VSSO) திருத்தங்கள்

ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன மற்றும் பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் கீழான அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட தன்னார்வ சமூக சேவை அமைப்புகளைப் பற்றிய சட்டத்திற்கான (VSSO) திருத்தங்கள் சிவில் சமூக அமைப்புகள் அனைத்திற்கும் பாரதூரமானதாகவிருந்தது. அவர்கள், முன்வைக்கப்பட்ட திருத்தங்களின் சாத்தியம் மற்றும் அடிப்படை தொடர்பாக தங்களுடைய கரிசனைகளையும் உடன்பாடின்மையினையும் வெளிப்படுத்தினர். யாப்புரீதியாக உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளுக்கு அமைவாக இருக்கவேண்டிய அவசியத்தினை அவர்கள் வலியுறுத்தினர். எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பாக, அரசசார்பற்ற அமைப்புகளானவை அனைவருக்கும் பிரயோகிக்கப்படும் நாட்டுச் சட்டங்களினால் ஆட்சிசெய்யப்படல் வேண்டும் எனவும் அவர்கள் வேறுபட்டவகையில் பார்க்கப்படக்கூடாதுஎனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். அனைத்து சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்குமான, உள்வாங்கும் தன்மையினை கருத்தில் எடுக்காது ஒரு மட்டமான தளமானது வலியுறுத்தப்பட்டது. அரசாங்கமானது திருத்தங்களை பின்வாங்கி, சட்டத்தினால் பாதிக்கப்படவிருக்கும் சிவில் சமூக அமைப்புகளுடன் ஒரு கலந்தாரய்வினை திறந்தது.

தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் அவர்கள், தற்போதுள்ள தன்னார்வ சமூக சேவைகள் அமைப்புகளைப் பற்றிய சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவருவதற்கான மாற்றுவழிகளையும் திருத்த வரைவொன்றையும் சமர்ப்பிக்கும் பணியினை சிவில் சமூக அமைப்பினைக் கூட்டிகுழுவிற்குசாட்டினார். இவ்விடயம் 2018 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் திகதி பிரதமர் ரனில் விக்ரமசிங்க, அமைச்சர் மனோ கணேசன், தன்னார்வ தொண்டு செயலகத்தின் அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகத்தின் பரந்தளவிலானதொரு குழு ஆகியவற்றுக்கு இடையிலான கலந்துரையாடலில் எட்டப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட LDO 32/2011 இலக்கமுடைய மூலவரைவு திரும்பப் பெறப்பட்டதையடுத்து இன்றியமையானதொரு விடயமாக மாற்றமடைந்தது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் அமைச்சர் மனோ கணேசன் ஆகியோரிடமிருந்தான அறிவுறுத்தல்களுக்கு பதிலளிக்கும் வகையில் 2018 மார்ச் மாதம் இலங்கை சிவில் சமூக அமைப்புகளால் இந்தக் குழு கூட்டப்பட்டது. ,ந்தமுன்னெடுப்பில் ஒருஎண்ணிக்கையானசிவில் சமூகபிரதிநிதிகள் செயற்பாட்டுடன் பங்குபற்றினர்.

இக்குழு 2018 ஜுன் முதல் ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்தில் நாடளாவிய ரீதியில் ஒன்பது மாகாணங்களிலிருந்தும் 348 தனிநபர்களை உள்ளடக்கும் வகையில் 233 அமைப்புகளுடன் கலந்தாராய்வுகளில் ஈடுபட்டது. மேலும், இக் குழு 2019 மே மாதம் 22 ஆம் திகதியன்று அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தின் பிரதிநிதிகளையும் சந்தித்தது. நிதி செயற்பாடுகளுக்கான செயலணி (FATF)மற்றும் தொடர்புடைய பிற ஒழுங்குறுத்தல் சட்டகங்களின் கீழ் இலங்கை கொண்டுள்ள கடப்பாடுகள் தொடர்பாக தங்களது பிரதிபலிப்புகளை வெளிப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசாமி அவர்களையும் நிதி புலனாய்வு பிரிவினையும்(குஜஐரு)இக்குழு சந்தித்தது.

## கலந்தாராய்வுகள் மூலம் வெளிக்கொணரப்பட்ட விரிவானவிடயங்கள் (கண்டுபிடிப்புகள்)

சிவில் சமூக அமைப்புகள் தங்களை அரசில் பதிவுசெய்துகொள்வதற்கான நோக்கங்கள்யாவை என்பதைப் பற்றி அவர்கள் கொண்டிருந்த விளக்கத்தை கண்டறிந்தமை கலந்தாராய்வின் மூலம் கண்டறியப்பட்டதொரு விடயமாகும். அவர்களின் இந்த நோக்கம் தங்களை ஒரு சட்டபூர்வமான நிறுவனமாக அங்கீரித்துக்கொள்ளும் நோக்கத்தினை அடிபபடையாகக் கொண்டிருந்ததுடன் அதற்கான சில காரணங்கள் பின்வருமாறு.

- வரையறுக்கப்பட்ட கடப்பாடு (இந்நிலையின் கீழ் கடப்பாட்டினை அமைப்பு கொண்டிருப்பதுடன் தனிநபர் அப்பொறுப்பினை கொண்டிருப்பதில்லை)
- நன்கொடையாளர்களிடமிருந்து நிதியுதவியைத் நாடுவதற்கும் பெற்றுக்கொள்வதற்கும் காணப்படும் வாய்ப்பு (பல கொடையாளர்கள் பதிவு செய்யப்படாத நிறுவனங்களுக்கு நிதியளிப்பதில்லை)
- சட்டபூர்வமான எந்தவொரு நிறுவனமும்கொண்டிருக்கும் உரிமைகளை தாங்களும் அடைந்துகொள்ளுதல் (ஊழியர்களை வேலைக்கு அமர்த்துதல், ஒப்பந்தங்களை முடிவுறுத்துதுல் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல்)

இவ்வாறு தங்களை பதிவு செய்துகொள்ளும் எந்தவொரு சிவில் சமூக அமைப்பும் ஏனைய நிறுவனங்களுக்கு நிகராகவே நடத்தப்படுதல் வேண்டும். நிறுவனங்களை பதிவுசெய்துகொள்வதற்கு காணப்படும் பல்வேறு பதிவுத் தெரிவுகளை கொண்டிருக்க அவர்கள் விரும்பார்வம் கொண்டிருப்பதுடன் தொழிற்பாட்டின் தன்மை, சூழமைவு மற்றும் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் பதிவு வகையை தீர்மானித்துக் கொள்வதற்கு இதன்மூலம் அவர்களுக்கு வாய்ப்பு கிட்டுகின்றது. இதன் கீழ் மேற்கொள்ளக்கூடிய அனுமானங்களாவன (பதிவு செய்வதற்கு தங்களை உட்படுத்திக்கொள்பவர்கள் சார்பாக)

அ) கம்பனிச் சட்டம், நம்பிக்கை பொறுப்புச் சட்டம் அல்லது சங்கங்கள் சட்டம் போன்றவற்றின் கீழ் தங்களை பதிவுசெய்தகொள்ளக்கூடிய நிறவனங்கள் போலன்றி சமுதாய மட்டத்தில் பணிபுரியும் அமைப்புகளுக்கும் சங்கங்களுக்கும் பெரும்பாலும் இத்தகைய அங்கீகாரம் தேவைப்படலாம். (பதிவுக்கான செலவு போன்ற காரணங்களினால்)

ஆ) மாவட்ட மற்றும் பிரதேச மட்ட அமைப்புகள் மற்றும் சங்கங்களுக்கு பல்வேறு அரசு நிறுவனங்களுடன் இணைந்து செயற்படும் பொருட்டு இவ்வகையிலானதொரு அங்கீகாரம் தேவைப்படக்கூடும்.

சிவில் சமூக அமைப்புகள் எந்த வகையின் கீழ் தங்களை பதிவுசெய்து கொண்டிருந்தாலும் சமத்துவமிக்கதொரு தளத்தில் பணியாற்றுவதற்கும் நாட்டின் அனைத்து நிறுவனங்களுக்கும் ஏற்புடையவாறாக எச்சட்டம் விளங்குகின்றதோ அதே பொதுவான சட்டத்தின் கீழ் அந்நிறுவனங்களும் ஒழுங்குறுத்தப்படுவதற்கும் விருப்பத்ததை கொண்டிக்கின்றன. (தண்டனைச் சட்டக்கோவை, 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை கட்டுப்படுத்துவதற்கான சட்டம் பற்றிய உடன்படிக்கை,2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதி பரிமாற்றங்களை அறிக்கையிடுவதற்கான சட்டம், 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணத் தூய்மையாக்கல் பற்றிய சட்டம் போன்ற)எவ்வகுதியின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது எனும் விடயம் பொருட்படுத்தாமல். எந்தவொரு சட்டவிரோத அல்லது சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கும் ஒழுங்குறுத்துவதற்கும் அரசு ஏனைய பல்வேறுவிதமான சட்டங்களைக் கொண்டுள்ளதால் தன்னார்வ சமூக சேவைகள் சட்டம் அல்லது அரச சார்பற்ற அமைப்புகள் பற்றிய சட்டம் ஆகியவை இவ்வாறான விடயத்திற்கான சாதனங்களாக அமைவதற்கான தேவைப்பாடுகள் காணப்படுவதில்லை.

இவ்விடயத்தில் அறிமுகப்படுத்தப்படுகின்ற எந்தவொரு திருத்தமும் நாட்டிலுள்ள இலாப நோக்கற்ற துறையை முன்னேற்றுவதற்கான ஒரு படிமுறையாக இருத்தல் வேண்டும். எனவே, இத் திருத்தம் எதிர்காலத்தில் சமூக தொழில்முயற்சிகள் அத்துடன் தொழில்நுட்ப மற்றும் சமூக புத்தாக்கம் ஆகியவற்றுடன் இத்துறை வளர்ச்சியடைந்து வரும்போது அதற்கானதொரு அத்திவாரத்தை கட்டியெழுப்பக்கூடியதாக அமைதல் வேண்டும்.இது குறிப்பாக இலாப நோக்கற்ற அமைப்புகள்

பொது நன்மை நிலையைப் அடைந்துகொள்வதன் ஊடாக பெற்றுக்கொள்ளக்கூடிய வரி விலக்கு போன்ற மேலதிக நன்மைகள் தொடர்பாக ஏற்புடையாதாகும். இவ்விடயத்தை கட்டுப்படுத்துவதற்கான கோட்பாடுகள் விருத்தியாக்கப்பட வேண்டுமென்பதுடன் அவசியமாகுமிடத்து திருத்தங்களை அடுத்த கட்டததில் அறிமுகப்படுத்துதல் வேண்டும்.

இக்கலந்தாராய்வுகள் சிவில் சமூக அமைப்புகளை பதிவு செய்துகொள்ளும் விடயத்தில் முகம்கொடுக்கபட்ட பல்வேறு விதமான சவால்களையும் பதிவு செய்கின்ற விடயத்தில் அரச நிறுவனங்களின் எதிர்பார்ப்புகளையும் வெளிக்கொணர்ந்தன.முன்மொழிவுகளை சமர்ப்பித்தல், அதனையடுத்த திட்ட நடவடிக்கைகள்ஆகியவற்றிற்கு முன் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு அமைப்புகள் நிர்ப்பந்திக்கப்படுதல், அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு கடுமையான விதிகள் மற்றும் நிபந்தனைகளை விதித்தல், நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் குறித்து அறிக்கையிடுமாறு நிர்ப்பந்திக்கப்படுதல் மற்றும் கிராம அலுவலர்∴ பிரதேச செயலாளர் போன்றவர்களிடமிருந்து அத்தாட்டசிப்படுத்தல்களை பெறுவதற்கு நிர்பந்திக்கப்படுதல்நிதி வளங்களின் பகிர்வு ∴ பயன்படுத்துதல் போன்வற்றிற்கு வழிகாட்டல்களை வழங்குதல், வருடாந்த திட்டத்திற்கான அங்கீகாரம் கோரப்படும் போது விமர்சனங்களுக்கும் தொந்தரவுகளுக்கும் உள்ளாகுதல் போன்ற விடயங்களும்இக்கலந்தாய்வுகள் ஊடாக கண்டறியப்பட்டன. சிறிய அமைப்புகள்,அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகம் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான ஒருங்கிணைப்பாளரால் கூட்டப்படுகின்ற கூட்டங்களில் கலந்து கொள்ள தாங்கள் நிர்பந்திக்கப்படுவதாக உணர்வதுடன் அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் இதுபோன்ற அமைப்புகளின் செயற்பாடுகள் மற்றும் அங்கீகாரம் பாதிக்கப்படும் என்ற நியாயமான அச்சமும் அவர்களிடத்தில் நிலவுகின்றது. இவ்வாறான கெடுபிடிகள்ஒருங்குசேர்வதற்கான சுதந்திரத்துக்கு குந்தகம் ஏற்படுத்தும் கலாசாரமொன்று வளர்ச்சியடைவதற்கு வசதியளிப்பதுடன் அரச அதிகாரிகள் மத்தியில் ஏதேனுமொரு தனிப்பட்ட நலனை எதிர்பார்க்கம் ஒரு நடத்தையை தோற்றுவிப்பதற்கும் காரணமாக அமைகின்றது. எனவே அறிமுகப்படுத்தப்படும் எந்தவொரு திருத்தமும் ஒருங்குசேர்வதற்கான சுதந்திரம்பாதுகாக்கப்படுவதற்கும்இயலச்செய்விக்கும்சூழலொன்றை தோற்றுவி□ப்பதற்கும் அரசு கொண்டுள்ள கடப்பாட்டினை வலியுறுத்துவதாக அமைதல் வேண்டும்.

விரிவாக நோக்குகையில் மேற்படி சவால்கள் செயற்பாடுகளின் தன்மை மற்றும் நோக்கெல்லையை நிர்ணயிப்பதில் அரச அலுவலர்களினால் தோற்றுவிக்கப்படுகின்ற நடைமுறைசார் அசௌகரியங்கள் மற்றும் மட்டுப்பாடுகள் எனும் வகைக்குள் அடங்குகின்றன. குறிப்பாக சிவில் சமூக அமைப்புகளின் நடவடிக்கைகள் மீது கடுங்கண்காணிப்பு செலுத்தப்படுதல் தொடர்பாகவும் பதிவு செய்யப்பட்ட அமைப்புகளுக்கு பல்வேறு விடயங்களுக்கு அங்கீகாரம் வழங்கும் விடயத்தில் நிர்வாக முறையில் காணப்பட்ட ஊழல் மற்றும் கட்டாயப்படுத்தல் நடைமுறைகள் தொடர்பாகவும் அதிக கரிசனை வெளியிடப்பட்டது.தற்போது நடைமுறையிலுள்ள நிர்வாக முறைமையைப் பொருத்தமட்டில், குறிப்பாக மாவட்டத்திற்குள் இந்த முறைமை, சிவில் சமூக அமைப்புகளை சுயாதீன செயற்பாட்டாளர்கள் எனும் கண்ணோட்டத்தில் பார்ப்பதை விட அரசக் கொள்கையை முன்னெடுப்பதற்கான நடைமுறைப்படுத்தல் பொறிமுறையின் ஒரு நீட்சியாகவே நடாத்தப்படுவதாக காணக்கிடைக்கின்றது.

பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களோடு செயற்படுவதற்கு அரசு கொண்டுள்ள பணிப்பாணை மற்றும் பொறுப்புகள் தொடர்பாக தெளிவானதொரு நிலை இல்லாதிருத்தல் அறிக்கையிடப்பட்டதொரு பொது அனுபவமாகும்.இவ்விடயத்தினைசிவில் சமூக அமைப்புகளை பணியாற்றுவதற்கு இயலச்செய்யும் வகையில் நிர்வாக ஏற்பாடுகளில் காணப்படும்வேறுபட்ட நிறுவனங்கள் (பாத்திரங்கள்) மற்றும் அவற்றிற்கிடையில் காணப்படவேண்டிய இடைத்தொடர்புகளை தெளிவுபடுத்தும் கொள்கை ஆவணமொன்றின் வாயிலாக சிறப்பான முறையில் கையாளுவதற்கு விதந்துரைக்கப்படுகின்றது.

இங்கு நிலவுகின்ற சிக்கல்மிகுந்த சூழமைவுகளையும் பல்வேறுபட்ட சிவில் சமூக அமைப்புகளையும்சிவில் சமூக அமைப்புகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் காணப்படும் எண்ணற்ற கொடுக்கல் வாங்கல்களையும் நோக்குமிடத்து இவை நிர்வாக ஏற்பாடுகளின் ஒரு பகுதியாகவும் ஒருகொள்கைஆவணத்திலும் இருக்கவேண்டுமே தவிர இவ்விடயத்தில் சட்டம் (இச்சந்தர்ப்பத்தில் உள்ளதைப் போன்றுதன்னார்வ சமூக சேவைகள் அமைப்புகள் பற்றிய சட்டம்) மிக குறைந்தளவிலேயே செல்வாக்கு செலுத்துதல் வேண்டும்.

பதிலளிக்க தேவையானதென கலந்தராய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதெனினும் கொள்கை வழிவகைகள் மூலம் மிகவும் பயனுறுதிவாய்ந்த வகையில் பதிலளிக்கக்கூடியதால் சட்டரீதியிலான திருத்தங்கள் வாயிலாக பதிலளிக்க வேண்டுமென முன்மொழியப்படாத விடயங்கள்பின்வருமாறு.

அ) பல்வேறு மட்டங்களில் அரச நிறுவனங்கள் தீர்மானம் மேற்கொள்ளும் போது சிவில் சமூக அமைப்புகளின் பங்கேற்பு

ஆ) அரச துறைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் ஆகியவற்றிற்கிடையிலான தகவல் பரிமாற்றங்கள்

இ) இரு தரப்பும் விருப்பார்வம் கொண்டுள்ள துறைகள் மற்றும் அவசர நிலைகள் (இயற்கை அனர்த்தங்கள் போன்ற) ஆகியவற்றில் இணைந்து பணியாற்றுதல்.'.ஒருங்கிணைப்பு

அரச திணைக்களத்தினாலன்றி சுயாதீனமானதொரு அலகினால் (மிகச்சிறந்த சர்வதேச நடைமுறைகளுக்கு அமைவாக) கையாளப்பட வேண்டியதாக கலந்தாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட துறைகளில் பின்வரும் துறைகள் உள்ளடங்குகின்றன.

அ) பதிவு மறுக்கப்படுதல் தொடர்பான முதற்கட்டமேன்முறையீடுகள் (மற்றும் எதிர்காலத்தில் பொது நலன்அந்தஸ்து)

ஆ) சிவில் சமூக அமைப்புகள் துறை தொடர்பான அரசாங்க கொள்கை குறித்து அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்

இ) இத்துறை தொடர்பான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் ஒருங்கிணைப்பு ஏற்பாடுகள் தொடர்பாக பிற அரசாங்க நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குதல்

ஈ) வெளியீடுகள், ஆலோசனைகள், பயிற்சி மற்றும் ஆற்றல் விருத்தி ஆகியவற்றின் மூலம் அரச சார்பற்றஅமைப்புகள் மற்றும் துறையின் சிறந்த ஆளுகையையும் நிர்வாகத்தையும் ஊக்குவித்தல்.

உ) நடத்தைக் கோவைகளை ஏற்றுக்கொண்டுபேணிவருதல் மற்றும் செயலாற்றுகையினை மெய்ப்பித்துக்கொள்வதற்கான சுயாதீன முறைமைகள் உள்ளிட்ட முறைசார்ந்த சட்டரீதியிலான ஒழுங்குறுத்தல் சட்டகத்திற்கு மேலதிகமாக அதனைகுறைநிரப்பும் வகையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் தாங்களாகவே தங்களை சுய ஒழுங்குறுத்தலுக்கு உட்படுத்திக்கொள்வதற்கு ஊக்குவித்தல்

ஊ) அரசு சார்பற்ற நிறுவனங்களின் வகிபாகம் மற்றும் அவற்றின் ஆளுகை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான விடயங்கள் குறித்து பொதுமக்கள்மத்தியில் விழிப்புணர்வை மேம்படுத்துதல்

ஒருசுயாதீனஅலகானதுநடுத்தர ,டையீட்டாளராக பட்சததில் இவை சிவில் சமூக அமைப்புகளினால் கையாளப்படவேண்டியவைகளாக இருப்பதுடன் அரச திணைக்களமொன்றின் கீழ் கொண்டுவரப்படக்கூடாது.

## தன்னார்வ சமூக சேவைகள் அமைப்புகளின் திருத்தங்களுக்கான வழிகாட்டல் கோட்பாடுகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளிலான எந்தச் சட்டத்திற்குமான ஒருஅடிப்படை:

- ஒருங்குசேர்வதற்கான சுதந்திரம்
- அரச சார்பற்ற நிறுவனங்களை சமத்துவமான முறையில் நடாத்துதல் மற்றும் பாரபட்சம் காட்டாமை
- கருத்துச் சுதந்திரம்
- சுதந்திரம்

- சங்கங்களின் விழுமியங்கள், திட்டங்கள் மற்றும் செயல்பாட்டு நடைமுறைகள் ஆகியவற்றை (தன்னாளுகை) நிருணயிப்பதற்கும் தீர்மானிப்பதற்கானதுமான சுதந்திரம்

- தொடர்பாடலில் ஈடுபடுவதற்கும் ஒத்துழைப்பதற்குமான உரிமை

- சிவில் சமூக அமைப்புகளுக்குஇயலச்செய்யும் ஒரு சூழலை தோற்றுவிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் அரசு கடமைகொண்டுள்ளது

- ஒருபல்தரப்பட்ட,செயற்றிறனானமற்றும் உயிர்ப்புடையசிவில் சமூகமானதுஒருதொழிற்படும் ஜனநாயகத்தின் ஒரு ,ன்றியமையாதஅம்சமாகவிருக்கும்.

இலங்கை பிரசைகளுக்கு ஒன்றிணைந்துபணியாற்றுவதற்கு சுதந்திரம் உள்ளதென்பதே இதன் அடிப்படை கருதுகோளாக அமைகின்றது. அதற்கமைவாக தங்களது அமைப்புகள் சட்டபூர்வமான ஆள் எனும் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக பதிவு தேவைப்படுகின்ற அத்தகைய அமைப்புகள் நிதியைப் பெறுவதற்கான நோக்கத்திற்காகவோ, பொதுவானதொரு தலைப்பின் கீழ் ஆதரித்துவாதாடும் நோக்கத்திற்காகவோ, அல்லது நிலைபேறான செயற்பாடுகளுக்கு தாபன ரீதியிலான ஒத்தாசை வழங்கும் நோக்கத்திற்காகவோ செயல்படினும்இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்வதற்கு அனுமதியிருத்தல் வே□ண்டும். இவ்வாறு பதிவு செய்வதன் நன்மை யாதெனில் பதிவுசெய்யப்பட்ட அமைப்புகள் மற்றும் சங்கங்கள் ஒரு குறைந்தபட்ச அடிப்படை தரத்திலான பொறுப்புக்கூறலுக்கு தானாக முன்வந்து தங்களை உட்படுத்திக்கொள்வதாகும். (கணக்குக் கூற்றுக்களை சமர்ப்பித்தல், வருடாந்த அறிக்கையினை சமர்ப்பித்தல் போன்றவை வாயிலாக)

அரசின் கடப்பாடு யாதெனில் சிவில் சமூக நிறுவனங்கள் அவற்றின் பணிகளில் ஈடுபடுவதற்கு பொருத்தமான சூழலொன்றை உருவாக்குவதாகும். அரச நிறுவனங்களுக்கு சிவில் சமூக நிறுவனங்களுடன் பணியாற்றமுடியும்.ஆயினும் எந்தவொரு அரச நிறுவனத்திற்கோ அல்லது கேந்திரமயப்படுத்தப்பட்ட அமைப்பிற்கோ சிவில் சமூக அமைப்புகளின் பணிகளில் தலையீடு செய்வதற்கோ அல்லது கட்டளையிடுவதற்கோ தத்துவம் வழங்கப்படக்கூடாது. ஆகவே இந்நிறுவனங்களின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கோ, மேற்பார்வை செய்வதற்கோ, அமைப்புகளுக்கு எதிராக வழக்கு தொடருவதற்கோ அல்லது சுவீகரித்துக்கொள்வதற்கோ இச்சட்டத்தின் வாயிலாக இடமளித்தல் கூடாது. சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் ஏனைய பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கு ஏதுவான அதே பொதுச்சட்டங்களுக்கு உட்பட்டதாகவிருத்தல வேண்டும்.அவைநாட்டில் உள்வாங்கப்பட்டுள்ள ஏனைய எந்தஅமைப்புகளையும் போன்றுஒத்ததன்மையுடையவாறு,அவற்றினுடையஅங்கத்தவர்களினால் அல்லதுஉள்வாங்கப்படுவதற்குஅவர்களுடையஆவணங்களில் குறிப்பிடப்பட்ட ஏனைய ஆட்சிசெய்யும் ஒழுங்குகளால் ஆட்சிசெய்யப்படும்.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தினை கொண்டுவருதல் அல்லது முன்மொழிவுகள் , வரவு செலவு திட்டங்கள், செயற்பாடுகள் மற்றும் பயனாளிகளின் பட்டியல்கள் போன்ற விடயங்களுக்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதை தேவைப்படுத்துவதற்கான முயற்சிகள் உள்ளிட்ட சிவில் சமூக அமைப்புகளை மேற்பார்வையிடவும் கட்டுப்படுத்தவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் சமீபத்திய வரலாறு சிவில் சமூக நிறுவனங்களின் பணிகளுக்கு உகந்ததல்ல எனும் விடயம்ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.சிவில் சமூக அமைப்புகளை பற்றிய அரச நுண்ணாய்வு, கட்டுப்பாடு மற்றும் சந்தேகம் மற்றும் அவற்றை அரசின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் ஒரு பொறிமுறையாக கருதுதல் போன்றவை தற்போது நிலவுகின்ற சூழலாகவும் அனுபவமாகவும் காணக்கிடைக்கின்றது. சட்டத் சீர்திருத்தம் இந்த சூழலுக்கு வசதியளிப்பதாக அமைந்துவிடக்கூடாது எனும் விடயத்தில் கவனமாக இருத்தல் வேண்டும்என்பதுடன் சாத்தியமான அனைத்துசந்தர்ப்பங்களிலும் நேர்மறையான ஈடுபாட்டை ஊக்குவிப்பதாகவும் அமைந்திட வேண்டும். சட்ட சீர்திருத்தம் ஒத்திசைவானதாக இருக்க வேண்டும் (நடைமுறையிலுள்ள விரிவான சட்ட கட்டமைப்பிற்கு முரணாகவோ அல்லது புறந்தள்ளுவதாகவோ இருத்தல் கூடாது) எனவே எந்தவொரு சட்டபூர்வமான நிறுவனத்திற்கும் பொதுவாக பொருந்தக்கூடிய குற்றவியல் சட்டம் மற்றும் நிதி ஒழுங்குறுத்தல் சட்டகங்கள் போன்றவற்றை பயன்படுத்துவதன் மூலம் சட்டவிரோத நடத்தைகளை

கையாள அனுமதிக்கப்படுவதாக இருத்தல் வேண்டும். அடிப்படையில் அரச-சிவில் சமூக இடைத்தொடர்பு இத் துறையின் சுதந்திரத்திற்கு மதிப்பளிப்பதாக அமைதல் வேண்டும்.

## முன்மொழியப்படும் திருத்தங்கள்.

### 1. நீண்ட பெயர் (விரிவான பெயர்)

நீண்ட பெயர் தற்போது பின்வருமாறு அமைந்துள்ளது:

தன்னார்வ சமூக சேவைகள் அமைப்புகளை அரசில் பதிவு செய்துகொள்வதற்கு இடமளிப்பதற்கும், அவற்றின் மேற்பார்வை மற்றும் சோதனைக்கு இடமளிப்பதற்கும். அவ்வாறான அமைப்புகளின்செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கு வசதியளிப்பதற்கும், உரிய முறையில் தாபிக்கப்பட்டுள்ள அவ்வாறான நிறுவனங்களுக்கு அரச ரீதியிலான அங்கீகாரத்தினை வழங்குவதற்கும், அந்நிறுவனங்களின் தற்போதுள்ள சட்ட்ங்களுக்கு அமைவாக அவற்றின் அங்கத்தவர்களுக்கும், பொது மக்களுக்கும் அரசிற்கும் நிதி மற்றும் கொள்கை முகாமைத்துவம் சார்ந்த விடயங்களில் பொறுப்புக்கூறப்படுவதை வலியுறுத்தி நடைமுறைப்படுததுவதற்கும், அவ்வாறான நிறுவனங்களென தங்களை சித்தரித்துக்கொள்ளும் நபர்களினால் நிகழ்த்தப்படக்கூடிய நிதி மோசடிகளை தடுத்துநிறுத்துவதற்கும், சட்டரீதியிலான அங்கீகாரமற்ற தன்னார்வ சமூக சேவை குழுக்களின் யாப்பினை ஒழுங்குறுத்துவதற்கும் அதனுடன் தொடர்புடைய மற்றும் அதற்கு இடைநேர்விளைவானதுமான சட்டமாகும்.

தற்போதைய வடிவமைத்தலிருந்து பின்வருவனவற்றை அகற்றுவதற்கு முன்மொழியப்படுகின்றது

அ) தன்னார்வ சமூக சேவைகள்அமைப்புகள்எனும் பதத்திற்கு பதிலாக சிவில் சமூக அமைப்புகள் எனும் பதத்தை பிரதியிடுதல்

ஆ) அவற்றின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைக்கு இடமளித்தல்

இ) அத்தகைய அமைப்புகளின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கு வசதியளித்தல்

ஈ) ஒழுங்குமுறையில் தாபிக்கப்பட்ட அத்தகைய அமைப்புகளுக்கு அரசஅங்கீகாரத்தை வழங்குதல்

உ) அத்தகைய அமைப்புகளின் தற்போதைய விதிகளின் கீழ் நிதி மற்றும் கொள்கை முகாமைத்துவம்தொடர்பாக அத்தகைய அமைப்புகளின் உறுப்பினர்களுக்கும் பொது மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் அவ்வாறான அமைப்புகள் பொறுப்புக்கூறுவதை நடைமுறைப்படுத்துதல்,

ஊ) அத்தகைய அமைப்புகளென கூறிக்கொள்ளும் ஆட்களின் முறைகேடுகளைத் தடுத்து நிறுத்துதல்

எ) சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்படாத தன்னார்வ சமூக சேவைக் குழுக்களின் யாப்பினை ஒழுங்குமுறைப்படுத்துதல்

**பின்வருவனவற்றை சட்டத்தின் விடயப்பரப்புக்குள் உள்வாங்கிக்கொள்ள வேண்டுமென மேலும் முன்மொழியப்படுகின்றது.**

அ) பதிவுசெய்யப்பட்ட சிவில் சமூக அமைப்புகள் தொடர்பாக பகிரங்கமாக பார்வையிடக்கூடிய பதிவேட்டினை பராமரித்தல்

ஆ) தேவைப்படுமிடத்து நடவடிக்கைகளுக்கு வசதியளித்தல்

இ) பிரசைகள்அமைப்புகளிலும் அவ்வமைப்புகளின் நிறுவனசார் நடவடிக்கைகளிலும் தலையீடு செய்யமாமல் இருப்பதை உறுதிசெய்தல்

உ) உறுப்பினர்களுக்கும் பொது மக்களுக்கும் பொறுப்புக்கூறுவதை ஊக்குவிக்கும் வகிபாகமொன்றை சாட்டுதல்

ஊ) பிணக்குகளை தீர்ப்பதற்கானதொரு மாற்று வடிவமாக பிணக்குகளை தீர்க்கும் பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துதல்

**உத்தேச புதிய விரிவான (நீண்ட) பெயர்**

- இலாப நோக்கற்ற சிவில் சமூக அமைப்புகளின் தன்னார்வ பதிவுக்கு இடமளிப்பதற்கும்,
- ஒழுங்குமுறையில் அமைக்கப்பட்டுள்ள அத்தகைய நிறுவனங்களை அங்கீகரிப்பதற்கும்
- பதிவுசெய்யப்பட்ட சிவில் சமூக அமைப்புகள் தொடர்பாக பகிரங்கமாக பார்வையிடக்கூடிய பதிவேட்டினை பராமரிப்பதற்கும்
- அரசாங்க உதவிகள் தேவைப்படுமிடத்து அவ்வாறான செயற்பாடுகளுக்கு வசதியளிப்பதற்கும்
- அத்தகைய நிறுவனங்களின் சட்டபூர்வமான செயற்பாடுகளில் தலையிடாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கும்
- பிணக்குகளை தீர்ப்பதற்கான பொறிமுறையொன்றை உருவாக்கிக்கொள்வதற்கு இடமளிப்பதற்கும்
- அத்தகைய அமைப்பு அதன் உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் வகைபொறுப்புகூறுவதை ஊக்கப்படுத்துவதற்கும்
- அதனுடன் தொடர்புடைய மற்றும் அதற்கு இடைநேர்விளைவான கருமங்களுக்குமானதொரு சட்டமாகும்.

## 2. சுருக்கப் பெயர் மற்றும் நடைமுறைக்குவரும் திகதி

**அதன் சுருக்கப் பெயர் பின்வருமாறு :**

1. இந்தச் சட்டம் தன்னார்வ சமூக சேவை அமைப்புகள் (பதிவு மற்றும் மேற்பார்வை) சட்டம் எனக் எடுத்துக்காட்டப்படலாம். மேலும் அமைச்சரினால்வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற அத்தகைய தேதியிலிருந்து, (இதனகத்துப்பின்னர்"நியமிக்கப்பட்ட தேதி" என்று குறிப்பிடப்படும்) இது நடைமுறைக்குவரும்

**பின்வருவனவற்றை நீக்குவதற்கும்பதிலீடு செய்வதற்கும் முன்மொழியப்படுகின்றது:**

1. இந்தச் சட்டம் தன்னார்வ சமூக சேவை அமைப்புகள் (பதிவு மற்றும் வசதியளித்தல்) சட்டம் எனக் எடுத்துக்காட்டப்படலாம்.மேலும் அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற அத்தகைய தேதியிலிருந்து, (இதனகத்துப்பின்னர்"நியமிக்கப்பட்ட தேதி" என குறிப்பீடுசெய்யப்படும்) இச்சட்டம் நடைமுறைக்குவரும்.

## 3. அலுவலர்களை நியமித்தல் (பிரிவு 2)

பிரிவு 2 - பராமரிக்கப்பட வேண்டிய பதிவாளர், துணை பதிவாளர்கள் மற்றும் உதவி பதிவாளர்கள் தொடர்பானது.

## 4. பதிவு செய்துக்கொள்வதற்கு தேவையானஅமைப்புகள் (பிரிவு 3)

தற்போது பிரிவு 3 பின்வருமாறு குறித்துரைக்கின்றது.

"இதனகத்துப்பின்னர் உள்ளடக்கியுள்ள எற்பாடுகளுக்குட்பட்டதாக அனைத்து தன்னார்வ சமூக சேவை அமைப்புகளும் (இதனகத்துப்பின்னர்" தன்னார்வ அமைப்பு "என குறிப்பீடுசெய்யப்படுகின்ற) இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுதல் வேண்டும்."

பிரிவு 3 பின்வருமாறு நீக்கஞ் செய்யப்பட்டு பிரதியீடு செய்யப்படுதல் வேண்டுமென முன்மொழியப்படுகின்றது:

3(i) இதனகத்துப்பின்னர் உள்ளடங்கியுள்ள எற்பாடுகளுக்குட்பட்டதாக தன்னார்வ சமூக சேவை அமைப்பொன்று (இதனகத்துப்பின்னர்" தன்னார்வ அமைப்பு "என குறிப்பீடுசெய்யப்படுகின்ற) இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படலாம்."

3(ii) பதிவுசெய்யப்பட்ட தன்னார்வ அமைப்பொன்று அத்தகைய அமைப்பின் அனைத்து சொத்துக்கள், வருவாய் மற்றும் இலாபங்களை அத்தகைய அமைப்பின் இலாப நோக்கற்ற விடயங்களுக்காக உதவுவதற்காக உறுதிபூண்டுள்ள அதேவேளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, தன்னார்வ அமைப்பின் எந்தவொரு ஸ்தாபகர், பணிப்பாளர், அதிகாரி, உறுப்பினர், பணியாளர் அல்லது நன்கொடையாளருக்கு நலன்களை வழங்குவதற்காக பயன்படுத்தாவிடின்அவ்வாறான பதிவுசெய்யப்பட்டதொரு தன்னார்வ அமைப்பு இலாப நோக்கற்ற நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்படும். ஆயினும், இப்பிரிவு நிறுவனத்திற்காக செய்யப்படும் பணிகளுக்காக அத்தகைய நபர்களுக்கு நியாயமான இழப்பீடு மற்றும் பிற தொழில்சார் சலுகைகளை வழங்குவதை தடுக்காது.

## 5. அமைப்புகளின் பதிவு (பிரிவு 4 -8)

4 - 8 பிரிவுகள் பின்வருமாறு:

**பதிவு**

1. அமைப்பொன்றுஇலங்கையில் ஒரு சட்டப்பூர்வமான அமைப்பாக செயல்படுவதற்காக தன்னார்வ சமூக சேவை அமைப்புகள் (பதிவு மற்றும் வசதியளித்தல்) சட்டத்தின் கீழ் பதிவு செய்துகொள்வதற்கு பதிவாளருக்கு விண்ணப்பிக்க இயலும்[1] என்பதுடன் இவ்விடயத்தில்எழக்கூடியவாறான சந்தேகத்தைத் தவிர்க்கும் பொருட்டுஇச் சட்டத்தின் கீழ் பதிவு செய்துகொள்ளும் விடயமானது தன்னார்வமிக்கதாக அமைவதுடன் பதிவு செய்துகொள்ளாமை[2] எவ்விதத்திலும் மோசமான விளைவுகளை தோற்றுவிக்காது.

2. பதிவாளருக்கு பின்வரும் தேவைப்பாடுகளை சமர்ப்பிப்பதன் மூலம் அமைப்பொன்று தன்னை பதிவுசெய்துகொள்ள இயலும்.

2.1 (அ) இந்தச் சட்டத்தின் அட்டவணை 1 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்

2.2 (ஆ) அமைப்பின் யாப்பு[3] அல்லது பிற ஆளுகை ஆவணம் (நிருவுதல் சாதனம்).

3. ஒரு வெளிநாட்டு அல்லது சர்வதேச அமைப்பு பதிவாளரிடம் பின்வரும் தேவைகளை சமர்ப்பிப்பதன் மூலம் பதிவு செய்துகொள்ளலாம்.

3.1 (அ) இந்தச் சட்டத்தின் அட்டவணை 2 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்

3.2 (ஆ) இது பிறிதொரு நாட்டில் சட்டபூர்வமான ஆள் என்பதற்கான சான்று

3.3 (இ) இலங்கையில் அமைப்பின் முகவரி

3.4 (ஈ) சர்வதேச அமைப்பின் தலைமையகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியிடமிருந்து பின்வரும் விடயங்களை குறிப்பிட்ட எழுத்திலான கூற்று:

3.4.1 (i) அமைப்பின் நோக்கங்கள்

3.4.2 (ii) இலங்கையில் அமைப்பின் செயற்பாடுகள் குறித்த பொதுவான விளக்கம்

---

[1] பதிவு கட்டாயமானதாக இருக்க வேண்டுமாஅல்லது தன்னார்வ ரீதியிலானதாக இருக்க வேண்டுமா. 187 பதில்கள். அதில், 161 (86.1%) தன்னார்வத்தில் 26 (13.9%) கட்டாயமானதாக இருததல்

[2] பதிவு செய்துகொள்ளாமைக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாது என சட்டத்தில் திட்டவட்டமாக குறித்துரைக்க வேண்டும் எனும் விடயத்திற்கு நீங்கள் இணக்கம் தெரிவிக்கின்றீர்களா? 177 பதில்கள்154 (87%) ஆம், 23 (13%) இல்லை

[3] விண்ணப்படிவத்துடன் சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்ககள் யாவை? 145 பதில்கள். 137 (94.5%) யாப்பு (ஆளுகை ஆவணம்): 1 (0.7%) ஆண்டறிக்கை, கையொப்ப ஆவணம், கணக்காய்வு அறிக்கை: 1 (0.7%) வரவு அறிக்கைபிரதி, அறிக்கைகள், நிதி அறிக்கைகள், 1 (0.7%) வரவு அறிக்கைகள், 1 (0.7%) அறிக்கைகள், 1 (0.7%) வங்கிக் கூற்றுக்கள், ஆண்டறிக்கை, அங்கத்தவர்களின் பட்டியல், 2 (1.4%) அங்கத்தவர்கள் பட்டியல்

3.4.3 (iii) அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தவும் உத்தியோகபூர்வ அறிவிப்புகள் மற்றும் வினவல்களைப் பெறவும் அங்கீகாரம் பெற்றுள்ள இலங்கையில் உள்ள தனிநபர் அல்லது தனிநபர்களின் பெயர், முகவரி மற்றும் பிற தொடர்பு தகவல்கள்

4. பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களிலுள்ள தகவல்களில்ஏதேனுமொரு மாற்றம் இருக்குமாயின் அதனை 60 அலுவலக நாட்களுக்குள் அத்தகைய அமைப்பு பதிவாளருக்கு அறிவித்தல் வேண்டும். பதிவு செய்வதற்கான திருத்தங்கள் ஆரம்ப பதிவுக்கு பொருந்தக்கூடிய நடைமுறைகள், நியமங்கள் மற்றும் நேர வரம்புகளுக்கு உட்பட்டதாக இருக்கும். பதிவாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்கள் இந்தச் சட்டத்தின் பிரிவு ஒஒஇன் கீழ் குறிப்பிடப்பட்டு பதிவுசெய்யப்பட்டு பகிரங்கமாக பார்வையிடக்கூடியவாறு காணப்படும்.

5. இச் சட்டத்தின் கீழ் பதிவினை பெற்ற நிறுவனங்களின் பதிவேடொன்று பதிவாளரினால் பேணிவரப்படுவதுடன்பதிவாளர், அத்தகைய அமைப்புகளின் பெயர், முகவரி, நிறுவன வடிவம் மற்றும் நோக்கங்கள், அத்துடன் அதன் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் (பிரதிநிதிகளின்) பெயர், முகவரி மற்றும் பிற தொடர்புத் தகவல்களைப் குறித்துரைப்பார். ஏதேனுமொரு அமைப்பிற்கு பொது நலன் அந்தஸ்து உள்ளதாயின் அவ்விடயமும் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும். பதிவாளரால் நிறுவப்படும் கிரமமானஅலுவலக நேரங்களில் இப்பதிவேடு ஒரு மத்திய இடத்தில் பொதுமக்களுக்கு பார்வையிடக்கூடியவாறு வைக்கப்பட்டிருக்கும்.

6. பதிவாளர் அமைப்பொன்றை பதிவுசெய்துகொள்வதற்காக விண்ணப்பம் கிடைக்கப்பெற்றபின்னர் மேலதிக தகவல்கள் அல்லது விளக்கத்தை வழங்குமாறு எழுத்தில் வேண்டுகோள் விடுக்கின்ற சந்தர்ப்பங்களைத் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் 15[4] அலுவலக நாட்களுக்குள் பதிவுச் சான்றிதழை வழங்குவார் அல்லது பதிவு செய்வதை நிராகரிப்பதற்கான எழுத்திலான தீர்மானத்தை அறிவிப்பார்.

**பதிவினை மறுத்தல், இடைநிறுத்துதல் அல்லது இரத்து செய்வதற்கான காரணங்கள், பதிவு மறுப்பு**

7. பதிவாளர் ஒரு விண்ணப்பத்தை பின்வரும் காரணங்கள் நிமித்தம் மறுக்கலாம்[5]:

7.1 (அ) பதிவு ஆவணங்கள் இந்த சட்டத்தின் தேவைகளுக்கு இசைந்தொழுகாத சந்தர்ப்பத்தில்

7.2 (ஆ) அமைப்பின் சட்டங்கள் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் 1244 (1999) தீர்மானத்தினை மீறுகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது, இச் சட்டத்தின் கீழ் ஏதேனும் ஒழுங்குவிதிகள் மீறப்படும்போது

7.3 (இ) பதிவினை நாடும் அமைப்பின் அதே பெயரை அல்லது அதற்கொத்த பெயரினை ஏற்கனவே பதிவுசெய்யப்ப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனுமொரு அமைப்பு கொண்டிருத்தல் காரணமாக குழறுபடிஏற்படுவதற்கு வாய்ப்புள்ள நிலை காணப்படும்போது

8. பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தை மறுப்பதற்கான முடிவை பதிவாளர் எழுத்தில் அறிவிப்பார். அத்தகைய எழுத்திலான அறிவித்தல் பின்வரும் விடயங்களைக் உள்ளடக்கும்.[6]

---

[4] பதிவு செயன்முறை எவ்வளவு காலத்தை எடுக்கும்? 179 பதில்கள். 8 (4.5%) 5 நாட்கள் 1 (0.6%) 7 நாட்கள் 23 (12.8%) 10 நாட்கள் 108 (60.3%) 15 நாட்கள் 1 (0.6%) 21 நாட்கள் 31 (17.4%) 30 நாட்கள் 1 (0.6%) 50 நாட்கள் 1 (0.6%) 6 மாதங்கள் 5 (2.9%) 90 நாட்கள்.

[5] பதிவுக்கானதொரு விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கான தத்துவத்தை பதிவாளர் கொண்டிருக்க வேண்டுமென்பதற்கு நீங்கள் இணங்குகின்றீர்களா? 168 பதில்கள், 116 (69%) அமைப்பின் பெயர் பிறிதொரு அமைப்பின் பெயருக்கு ஒத்தததாக அல்லது ஓரளவிற்கு சமமானதாக இருக்குமாயின் குழப்பகரமான நிலையொன்று தோன்றலாம். 32 (19%) விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் பதிவுக்கான விண்ணப்பம் கொண்டிருக்கவில்லையாயின் (வேறு விததில் கூறுவதாயின் விண்ணப்படிவம் முழுமையானதாக இல்லாதிருப்பின்) 13 (7.7%) அமைப்பு இலாபம் ஈட்டும் நோக்கத்தினை கொண்டதாக தனது பிரதான பணியை கொண்டிருக்கும் போது 7 (4.2%) அமைப்பின் நோக்கங்கள் குற்றவியல் சட்ட ஆவணங்களை மீறுகையில்

[6] பதிவு நிராகரிக்கப்பட்டால் பின்வரும் விடயங்களை குறித்துரைத்து பதிவாளர் கடிதமொன்றை அனுப்ப வேண்டும் என்பதற்கு நீங்கள் இணக்கம் தெரிவிக்கீன்றீர்களா? 158 பதில்கள். 104 (65%) நிராகரிப்புக்கான காரணங்கள் (கேள்விக்கொத்தில் 3.3.1 இல் காரணங்களை தெரிவித்தல் (இந்த ஆவணத்தில் பந்தி 7) 54 (34.2%) நிராகரித்தல் தீர்மானத்தை சவாலுக்குட்படுத்துவதற்கு விண்ணப்பதாரி கொண்டுள்ள உரிமையினை அறிவித்தல் (சவாலுக்குட்படுத்துவதற்கு குறிப்பிட்டதொரு காலத்தை வழங்குதல் மற்றும் இவ்விடயம் மேற்கொள்ளப்படவேண்டிய அதிகாரியின் பெயர்,முகவரி,

8.1 (அ) விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட காரணங்கள்

8.2 (ஆ) முடிவு தொடர்பாக ஆட்சேபனை செய்வதற்கு விண்ணப்பதாரர் கொண்டுள்ள உரிமையின் அறிவித்தல்

8.3 (இ) முடிவு தொடர்பாக மேன்முறையீட்டை தாக்கல் செய்வதற்கான கால வரம்பு

8.4 (ஈ) மேன்முறையீடு செய்யப்பட வேண்டிய அதிகாரியின் பெயர், முகவரி மற்றும் பிற தொடர்பு விவரங்கள்.

**பதிவை மறுப்பதற்கான முடிவு தொடர்பாக மேன்முறையீடு செய்தல்**

9. ஒரு விண்ணப்பதாரர் பதிவினை மறுத்தமைக்கான முடிவை அத்தகைய மறுப்பு தீர்மானம் பற்றி அறியக்கிடைத்ததையடுத்துறும் 60[7] அலுவலக நாட்களுக்குள் செயலகத்திற்கு[8] மேன்முறையீடு செய்யலாம்.

10. செயலகம் மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 30[9] அலுவலக நாட்களுக்குள் மேன்முறையீடு தொடர்பிலான தங்களது தீர்மானத்தை மேற்கொண்டு மேன்முறையீட்டாளருக்கு (விண்ணப்பதாரருக்கு) அந்த முடிவை எழுத்தில் அறிவிக்கும். அவ்வாறான எழுத்திலான அறிவித்தலில் மேன்முறையீடு தொடர்பிலான அத்தகைய தீர்மானம் மேற்கொள்ளப்படுவதற்கான காரணங்கள் உள்ளடங்கும்.

11. மேல்முறையீட்டாளருக்கு (விண்ணப்பதாரர்) சார்பாகமேன்முறையீட்டு முடிவு அமையும் பட்சத்தில் மேன்முறையீட்டு அதிகாரம் கொண்ட அமைப்புமுறை, சம்பந்தப்படட அமைப்பினை பதிவுசெய்யுமாறு பதிவாளருக்கு எழுத்தில் அறிவிப்பை விடுக்கும்.

**பதிவினை இடைநிறுத்திவைத்தல் அல்லது இரத்து செய்தல்**

12. பதிவாளர் பின்வருமாறு[10] அமையுமிடத்து பதிவினை இடைநிறுத்தலாம்[11] அல்லது இரத்து செய்யலாம்:

12.1 (அ) அமைப்பு குற்றவியல் தவறொன்றை புரிந்துள்ளதாக தீர்ப்பளித்துள்ளதுடன் அதனை மேன்முறையீடு செய்வதற்கான அனைத்து செயன்முறைகளும் நிறைவுபெற்ற நிலையிலும் அத்தீர்ப்பு செல்லுபடியானதாகவிருக்கும் நிலையில்,

---

7 பதிவாளரினால் பதிவு நிராகரிக்கப்படுதல் தொடர்பான எந்தவொரு ஆட்சேபனையையும் விசாரணை செய்து தீர்ப்பளிக்கவேண்டியவர் யார்? 159 பதில்கள். 3 (1.9%) அமைசசர், 25 (15.7%) அமைச்சின் செயலாளர், 81 (50.9%) செயலகம், 21 (13.2%) பதிவாளர், 25 (15.5%) சுயாதீன கட்டமைப்பு/ஆணைக்குழு/தீர்மானம்/குழு/தீர்ப்பு: 2 (1.2%) குறைகேள் அதிகாரி, 1 (0.6%) அரச சார்பற்ற சுயாதீன செயலகம், 1 (0.6 ) செயலாளர்.

8 பதிவினை நிராகரித்தலர் தொடர்பான ஆட்சேபனையை எவ்வளவு காலததிற்குள் விண்ணப்பதாரியொருவர் தாக்கல் செய்தல் வேண்டும். 183 பதில்கள் 50 (27.3%) 30 நாட்கள் 118 (64.5%) 60 நாட்கள் 12 (6.4%) 90 நாட்கள்/3 மாதங்கள் 1 (0.5%) 45-60 நாட்கள் 1 (0.5%) 7 மாதங்கள் 1 (0.5%) தேவையில்லை

9 ஆட்சேபனை தொடர்பான தீர்மானம் எவ்வளவு காலத்திற்குள் வழங்கப்படுதல் வேண்டும், 174 பதில்கள். 27 (15.5%) 15 நாட்கள் 108 (62.1%) 30 நாட்கள் 33 (19%) 45 நாட்கள் 3 (1.7%) 90 நாட்கள் 2 (1.1%) 60 நாட்கள் 1 (0.6%) தேவையில்லை

10 பதிவுக்கு பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் செயலகம் பதிவினை இரத்து செய்வதற்கு தத்துவம் கொண்டிருக்க வேண்டுமா? 9 காணப்படும் பின்வரும் காரணங்களுக்கு இணக்கம் தெரிவிக்கின்றீர்களா? 183 பதில்கள்,117 (63.9%) இல்லை 66 (36.1%) ஆம்.

11 ஆமெனில், பின்வரும் காரணங்களின் அடிப்படையில் செயலகம் பதிவினை இரத்துசெய்யக்கூடும் என்பதற்கு நீங்கள் இணக்கம் தெரிவிக்கின்றீர்களா? 96 பதில்கள், 83 (86.5%) அமைப்பு குற்றவியல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்ததென நீதிமன்றமொன்றினால் தீர்ப்பளிக்கப்பட்டு இலங்கையில் அதற்கெதிராக ஆட்சேபனை செய்யக்சகூடிய அனைத்து வாய்ப்புகளும் நிறைவடைந்துள்ளாயின். 13 (13.5%) மாவட்ட நீதிமன்றமொன்றினால் இந்த அமைப்பின் பிரதான தொழிற்பாடு இலாபம் ஈட்டும் நோக்கமாக மாற்றமடைந்துள்ளதென தீர்ப்பளிக்குமாயின். (அவ்வாறானதொரு தீர்மானத்திற்காக செயலகத்தினால் மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கப்படுகின்றது. சுருக்கமுறை விசாரணை அமைப்பு குற்றவியல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்ததென நீதிமன்றமொன்றினால் தீர்ப்பளிக்கப்பட்டு இலங்கையில் அதற்கெதிராக ஆட்சேபனை செய்யக்சகூடிய அனைத்து வாய்ப்புகளும் நிறைவடைந்துள்ளாயின். 13 (13.5%) மாவட்ட நீதிமன்றமொன்றினால் இந்த அமைப்பின் பிரதான தொழிற்பாடு இலாபம் ஈட்டும் நோக்கமாக மாற்றமடைந்துள்ளதென தீர்ப்பளிக்குமாயின். (அவ்வாறானதொரு தீர்மானத்திற்காக செயலகத்தினால் மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கப்படுகின்றது. சுருக்க வழக்கு விசாரணை)

12.2 (ஆ) அமைப்பின் செயற்பாடுகள் அடிப்படையில் இலாப நோக்கமுடையவர்த்தமாக மாறியுள்ளதென நீதிமன்றமொன்று தீர்ப்பளித்துள்ள நிலையில்

12.3 (இ) தவறான அல்லது போலியான தகவல்களின்[12] மூலம் பதிவு பெறப்பட்டுள்ள நிலையில்,

13. எவரேனும் நபருக்கு அல்லது பொதுமக்களுக்கும் தீங்கு விளைவிக்கும் வகையிலான அச்சுறுத்தலை ஏற்படுத்தும் கடுமையான விதிமீறல்களைத் தவிர்ந்த சந்தர்ப்பங்களில், பதிவாளர் அத்தகைய அமைப்பிற்கு மீறல் குறித்த எழுத்திலான அறிவிப்பையும், பதிவை இடைநிறுத்துவதற்கு அல்லது இரத்து செய்வதற்கு முன்னர் பதிலளிக்க 60 நாட்கள் அவகாசத்தையும் வழங்குவார்.

## 6. பதிவாளரின் தத்துவங்கள் (பிரிவு 9)

("பதிவாளரின் பணிகள்" என திருத்தப்பட வேண்டும்)

## 7. மோசடி அல்லது முறைகேடான நிகழ்வுகளின் போது விசாரணை சபை (பிரிவுகள் 12- 14 மற்றும் 14 அ)

பிரிவு 12 முதல் 14 மற்றும் 14 அ இரத்து செய்யப்படவிருக்கின்றது.

## 8. ஒழுங்குவிதிகளை உருவாக்குவதற்கு அமைச்சர் கொண்டுள்ள தத்துவம் (பிரிவு 15)

பிரிவு 15 மாற்றமின்றி காணப்படும்.

## 9. சட்டத்திற்கு இணங்கியொழுகாமைக்கான அபராதம் (பிரிவு 16)

பிரிவு 16 இரத்து செய்யப்படவிருக்கின்றது.

## 10. சட்டத்திற்கு அமைவாக நல்நோக்கத்துடன் செயற்படும் அலுவலர்களை பாதுகாத்தல் (பிரிவு 17)

பிரிவு 17 மாற்றமின்றி காணப்படும்.

## 11. பொருள்கோடல் (பிரிவு 18)

இவ்வாறு பொருள்படுகின்றது:

இந்தச் சட்டத்தில், சூழமைவு வேறுவிதமாக தேவைப்படுத்தினாலன்றி "சமூதாய விடுதி" என்பது, தன்னார்வ அடிப்படையில் ஆட்கள் குழுவொன்றினால் தாபிக்கப்பட்ட அமைப்பொன்றின்மூலம் தங்கியிருக்கின்ற ஆளுக்கு உணவு மற்றும் பிற வசதிகளை வழங்குகின்ற எந்தவொரு ஆளுக்கும்பெற்றுக்கொள்ளக்கூடிய எந்தவொரு தங்குமிடமும் ஆகும். அத்துடன் "தன்னார்வ சமூக சேவைகள் அமைப்பு" என்பது தன்னார்வ அடிப்படையில் ஆட்கள் குழுவொன்றினால் உருவாக்கப்பட்ட எந்தவொரு அமைப்பாகவும் இருப்பதுடன்

(அ) அரச சார்பற்ற தன்மை கொண்டது

(ஆ) அதன் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் விடயத்தில் பொதுமக்களின் பங்களிப்புகள், நன்கொடைகள், அரசினால் வழங்கப்படக்கூடிய கொடைகள் அல்லது உள்ளூர் அல்லது வெளிநாட்டு நன்கொடைகள் ஆகியவற்றின் மீது தங்கியிருக்கின்றது.

(இ) அதன் முக்கிய குறிக்கோள்களாக, மனநலம் குன்றியவர்கள் அல்லது உடல் ஊனமுற்றோர், ஏழைகள், நோய்வாய்ப்பட்டவர்கள், அனாதைகள் மற்றும் ஆதரவற்றவர்களுக்கு தேவையான

12 பதிவினை இரத்து செய்வதற்கு செயலகத்திற்கு ஆற்றல் கிட்டக்கூடிய வேறேதேனும் காரணங்கள் உள்ளனவா? 1 பதில். தன்னார்வ அமைப்பு எனும் வரைவிலக்கணத்திற்கு உட்படுத்துவதற்கு தேவையான விடயங்களை பூர்த்திசெய்யாதிருக்கும் சந்தர்ப்பத்தில்

நிவாரணங்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் மற்றும் அனர்த்தங்களின் போது தேவையுடையவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்

**பின்வரும் பிரிவு மேற்படி பகுதியினை பிரதியீடு செய்யவேண்டுமென முன்மொழியப்படுகின்றது**

“தன்னார்வ சமூக சேவை அமைப்பு” என்பது தன்னார்வ அடிப்படையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களைக் கொண்ட குழுவொன்றினால் உருவாக்கப்பட்ட எந்தவொரு அமைப்பும் ஆகும் என்பதுடன் பின்வரும் இயல்புகளையும் கொண்டுள்ளது.

(அ) அரச சார்பற்ற தன்மை கொண்டது

(ஆ) பொது பங்களிப்புகள், அறக்கட்டளை, அரசாங்கத்தால் செலுத்தப்படற்பாலானகொடைகள் அல்லது உள்ளூர் அல்லது வெளிநாட்டு கொடைகள், பிணையவகையான பங்களிப்புகள் உயில்வழி கொடை, அங்கத்துவக் கட்டணம், பரிசுகள், மானியங்கள், உண்மையான அல்லது தனிப்பட்ட சொத்துக்கள், ஆகியவற்றைப் பொறுத்தது நன்கொடையைப் உறுப்பினர் கட்டணம் பரிசுகளை மானியம் உண்மையான அல்லது தனிப்பட்ட சொத்து தன்னார்வ சங்கத்தால் அதன் வளங்கள் மற்றும் ஆதனங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் எந்தவொரு சட்டபூர்வமான நடவடிக்கைகளிலிருந்தும் கிடைக்கும் வருமானம் ஆகியவற்றில் தங்கியிருக்கின்றது.

(இ) பொது நன்மைக்காகவோ அல்லது பரஸ்பர நலனுக்காகவோ எந்தவொரு சட்டபூர்வமான நோக்கத்தையும் அதன் முக்கிய நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

“சட்டபூர்வமானநோக்கம்” என்பது நல்லாட்சியை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள், சட்ட சீர்திருத்தம், கொள்கை சீர்திருத்தம் அல்லது பொதுமக்களில் ஓரங்கட்டப்பட்ட பிரிவுகளைச் சேரந்த மக்களின் உரிமைகளை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

**கொள்கைப் பொழிப்பு**

நிதியியல் நடைமுறைச் செயலணியின் வாதப்பிரதிவாதங்கள்:

இலங்கையிலுள்ள இலாபநோக்கமற்ற அமைப்புகள் மற்றும் நிதிநடைமுறைச் செயலணியின் தராதரங்கள் பற்றிய ஆதாரமற்ற கோரிக்கைகள் பற்றி எவ்வாறு எதிர்வுகூறிப் பதிலளித்தல்

## நிதியியல் நடைமுறைச்செயலணியின் (FATF) பின்னணி

நிதியியல் நடைமுறைச்செயலணி என்பது, பணச்சலவை, பயங்கரவாதத்திற்கு நிதியிடல் (வுகு) மற்றும் சர்வதேச நிதியியல் முறைமைகளுக்கான ஏனைய ஆபத்துகள் என்பவற்றிற்கு எதிராக போராடுவதற்காக சட்ட, ஒழுங்குமற்றும் நடவடிக்கை தராதரங்களின் செயற்றிறனுள்ள நடைமுறைப்படுத்தலை முன்னேற்றும் நோக்கங்களையுடைய அரசாங்கத்திற்கு உட்பட்ட ஒரு அலகாகும். இதனை முடிவுறுத்த, இந்தக் குற்றங்களுக்கு எதிராக போராடுவதற்கு அர்ப்பணிப்புள்ள நாடுகளுக்காக நிதி நடைமுறைச்செயலணியானது 40 சிபார்சுகளை விருத்திசெய்துள்ளது. இந்தச் சிபார்சுகளில் ஒன்றான, நிதியியில் நடைமுறைச்செயலணியின் சிபார்சு 8, என்பது 'இலாபநோக்கற்ற அமைப்புகள் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பதற்காக தவறாகப் பயன்படுத்தப்பட முடியாதவகையில் அவற்றினை (ழேுஓ) ஒழுங்குபடுத்தும் சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும்□ நாடுகள் மீட்டல் செய்யுமாறு வேண்டுகின்றது.[1] இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையுடன் அரசானது, ஏதாவது இலாபநோக்கற்ற அமைப்புகளாவது ஆபத்தில் இருக்கக்கூடுமாயின், அவற்றினை அடயாளப்படுத்த ஒரு துறைசார் (இலாபநோக்கற்ற அமைப்புகளின்) ஆபத்து மதிப்பீடு நடாத்துவது உள்ளிட்ட, பணச்சலவைக்கு எதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலிற்கு எதிரான (யுஆடு.்.ஊகுவு நிகழ்ச்சிநிரல் பற்றி தொடர்ச்சியான தொடர்பினையும் ஈடுபாட்டினையும் நடாத்த வேண்டுமென சிபார்சு 8 என்பது மேலும் வேண்டுகின்றது. நிதியியல் நடைமுறைச்செயலணியின் தராதரங்களின் கீழ், இலாபநோக்கற்ற அமைப்புகளும் துறைசார் பிரதிநிதிகளும், மதிப்பீட்டாளர்களுடன் நேரடியாக களத்திற்கு செல்வது உள்ளிட்ட, பரஸ்பர மீளாய்வு செயல்முறையிலும் ஈடுபடுத்தப்படல் வேண்டும். தாக்கத்தினைப் பொறுத்து, அரசாங்கமானது அதன்மேல் துறையுடன் கலந்தாலோசித்து இலக்குப்படுத்தப்பட்ட தணிக்கும் அளவீடுகளை விருத்திசெய்வதனைக் கருத்தில் எடுக்கவேண்டும்.[2] இந்தச் செயல்முறையுடன் ஒத்துழைக்கத் தவறுதல், சர்வதேச சமூகத்திடமிருந்தான நிதித்தடைகள் அல்லது மேலதிக தெளிவாக்கலுக்கான வேண்டுதல்கள் போன்றவற்றினை விளைவாக்கி நிதியியல் நடைமுறைச்செயலணியினால் நாடானது கறுப்புப்பட்டியலில் இடம்பெறபங்களிக்கும்.

நிதியியல் நடைமுறைச்செயலணியின் இலாபநோக்கற்ற அமைப்புகளுக்கு பொருத்தமான தராதரங்கள் பொதுவாக இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையினாலோ அல்லது அவற்றினை நடைமுறைப்படுத்துததற்கெனவுள்ள அரசமுகவர் அதிகாரிகளினாலோ அறியப்படுவதோ அல்லது விளங்கிக்கொள்ளப்படுவதோ இல்லை. அரசாங்கமானது, பணச்சலவைக்கு எதிரானதும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலிற்கு எதிரானதுமான தராதரங்கள் (யுஆடு.்.ஊகுவு) பற்றிய ஒருதவறானபுரிதலின் அடிப்படையில் அடிக்கடி இலாபநோக்கற்ற அமைப்புகளை அளவுக்கு அதிகமாக ஒழுங்குபடுத்துவதற்கு முனைகின்றது. இது சிவில் சமூக குழுக்களுக்கு குறிப்பிடத்தக்களவு தேவையற்ற சிரமங்களை விளைவாக்கியுள்ளது. மாறாக, யு.என். உடைய மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை முன்னேற்றவும் பாதுகாக்கவுமான விசேட அறிக்கையாளர், பயங்கரவாதத்தினை எதிர்க்கையில் சிலநாடுகள் நிதியியல் நடைமுறைச்செயலணியின் தராதரங்களை பாவித்துள்ளமையினை கண்டுள்ளார் "சிவில் சமூகத்திற்கு கணிப்பிடமுடியாதளவு சேதத்தினை" உருவாக்கும் "சிவில் சமூக தளத்தினை குறைத்து அரசியல் எதிர்ப்பினை தோற்கடிக்கும் ஒரு காரணியாக''.[3]

மேலும் விசேட அறிக்கையாளர், "பயங்கரவாதத்திற்கு எதிரான எந்த வினைத்திறனுள்ள தந்திரோபாயமும் வலுப்படுத்த வேண்டும், பலவீனப்படுத்தப்படக்கூடாது, சிவில் சமூகம்...... இயங்குவதற்கான சிவில் சமூகத்தின்

1 Best Practices on Combating the Abuse of Non-Profit Organisations, FATF, https://www.fatf-gafi.org/publications/fatfrecommendations/documents/bpp-combating-abuse-npo.html.

2 For more information, see https://fatfplatform.org/responses-and-remedies/outreach-and-engagement/.

3 Fionnuala Ní Aoláin, Impact of measures to address terrorism and violent extremism on civic space and the rights of civil society actors and human rights defenders, Repojrt of the Special Rapporteur on the promotion and protection of human rights and fundamental freedoms while countering terrorism, Mar 1, 2019, U.N. Doc A/HRC/40/52, at para 6.

இயலுமையை வரையறுத்தல் குறுகிய பார்வை கொண்டது, வினைத்திறனற்றது, அர்த்தமற்றது என்பதுடன் இதுவே வன்முறைக்கு பங்களிக்கும் ஒரு காரணியாக முடியும்" என்பதனை அவதானித்து அரசின் இந்த அளவீடுகள் உண்மையாக பயங்கரவாதத்திற்கு எதிராக போராட வினைத்திறனற்றதாக இருப்பதனையும் கண்டார்.[4]

துரதிஸ்டவசமாக, இலாபநோக்கற்ற அமைப்புகள் இந்த நிதியியல் நடைமுறைச்செயலணியுடன் பரீட்சயமற்றவர்களாக உள்ளனர் ஆகையால், அரசாங்கத்தின் செயற்பாடுகள் எவ்வாறு மற்றும் ஏன் அதிகளவில் விஸ்தரிக்கப்பமவில்லை என விவாதிக்க முடியாதுள்ளது. நிதியியல் நடைமுறைச்செயலணியின் தராதரங்கள் பற்றி அரசாங்கத்துடன் தொடர்பாடல் செய்வதுமற்றும் கறுப்புப்ப பட்டியலிடப்பட்ட நாடுகள் உள்ளிட்ட சிவில் சமூகத்தினை தடைக்குள்ளாக்கும் சட்டங்களையும் ஒழுங்குகளையும் நியாயப்படுத்த பயன்படுத்தப்படும் எதிராக செயற்படும் வாதங்கள் பற்றி இலாபநோக்கற்ற சட்டங்களுக்கான சர்வதேச நிலையமானது ஐஊடூ குறிப்பிடத்தக்களவு அனுபவத்தினைக் கொண்டுள்ளது. எதிரான-வாதங்களுடனான சிவில் சமூக பங்காளர்களும் மியன்மாரிலுள்ள இலாபநோக்கற்ற அமைப்புகளும் இன்னமும் வினைத்திறனுள்ள வகையில் பதிலளிக்க பயன்படமுடியும் என்பதுடன் பொதுவான அரசாங்கத்தின் வாதங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன,

**இலங்கையிலுள்ளநிதியியல் நடைமுறைச்செயலணி**

நிதியியல் நடைமுறைச்செயலணியின் ஆசிய பசுவிக் குழு (யூீபு) அங்கத்தவர் ஒருவராக, 2006இல் ஆசிய பசுவிக் குழுவினால் முதலாவதாக மீளாய்வு செய்யப்பட்டது. இலங்கையானது இலாபமற்ற ஒழுங்குபடுத்தல் பரப்பில், மேலும் துறைசார் ஆபத்து மதிப்பீட்டிற்கான நிதியியல் நடைமுறைச்செயலணியின் சிபார்சுடன் பகுதியாக பின்பற்றுவதாக அறியப்பட்டது.[5] ஆசிய பசுவிக் குழு (யூீபு), 2015இல் மீட்டல்செய்து, மீளவும் இலங்கையானது பகுதியாக கீழ்ப்படிவுள்ளதாக அறிந்து, ஒத்த சிபார்சுகளைவழங்கியது.[6]

2016இல், இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையானது பயங்கரவாதத்தின் துஸ்பிரயோகத்திற்கு 'குறிப்பாக இலகுவில் பாதிப்பிற்குள்ளாகக்கூடியது' என்ற நிரூபிக்கப்படாத கோரிக்கையினை அகற்றியதுடன் துறையினது பல்வகைத்தன்மையினை அங்கீகரித்து, ஒரு இலக்குப்படுத்தப்பட்ட, ஆபத்தினை- அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைக்கு மாற்றி, இலாபநோக்கற்ற அமைப்புகள் பற்றிய சிபார்சு 8 இனை நிதியியல் நடைமுறைச் செயலணியானது திருத்தம் செய்தது.

சிபார்சு 8 இல் ஏற்படுத்திய மாற்றத்தினை அவதானித்து, 2019இல் இலங்கையிலான ஆசிய பசுவிக் குழுவினது தொடர்ந்த மீளாய்வானது, "பயங்கரவாதத்திற்கு நிதியிடலிலான சாத்தியமான அதிகரித்த துஸ்பிரயோகத்திற்கான வாய்ப்புடன்"[7] இலாபநோக்கற்ற அமைப்புகளில் கவனத்தினை குவித்தது. 2019 மீளாய்வானது, இலங்கை "சிபார்சு 8 இனது புதிய அம்சங்களுக்கு பதிலளிக்க பலபடிமுறைகளை எடுப்பதற்கு தயார்படுத்திக்கொண்டிருந்தது"[8] என்ற அறிக்கையிட்டு பகுதியாக முறையிட்டு சிபார்சு 8இற்கான புள்ளியிடலை வைத்திருந்தது.

ஒக்டோபர் 2019இல், இலங்கையானது, கடந்த பரஸ்பர மீளாய்வு மீட்டலில் (ஆநுசுள) அடையாளப்படுத்தப்பட்ட தந்திரோபாய பணச்சலவைக்கு எதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலிற்கு எதிரான (யுஆடு.ஃஊகுவு) குறைபாடுகளுக்கு பதிலளிப்பதில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தினை ஏற்படுத்தியுள்ளதனை, நிதியியல் நடைமுறைச்செயலணி அடையாளப்படுத்தியது.[9] நிதியியல் நடைமுறைச்செயலணியானது தனது 'கறுப்புப் பட்டியலிற்கு அண்மையில்' இருந்து இலங்கையினை நீக்கியமையானது நிதியியல் நடைமுறைச்செயலணியினது கண்காணிப்பிற்கு கீழ்ப்படியும் செயல்முறையில் தொடர்ந்தும் கேள்விக்குள்ளாகாது என்பதனை அர்த்தப்படுத்துகின்றது.[10]

4 *Id.* at para 14.

5 APG, Mutual Evaluation Report on Sri Lanka, July 5, 2006, http://www.apgml.org/includes/handlers/get-document.ashx?d=866e80e0-42b2-484a-990b-0d61b3dfb19b.

6 APG, Mutual Evaluation Report, Sri Lanka, Sept 2015, http://www.apgml.org/includes/handlers/get-document.ashx?d=2d67b884-6021-48aa-8b24-bb1a641c5d1c.

7 APG, 4th Follow-Up Report, Mutual Evaluation of Sri Lanka, Oct 2019, http://www.apgml.org/includes/handlers/get-document.ashx?d=3bad76ad-0dc2-47ca-a41d-43067f22aeb2.

8 *Id.* at 5, para 46.

9 *Id.*

10 Sri Lanka removed from FATF's Grey List, The Economic Times, Oct 19, 2019, https://economictimes.indiatimes.com/news/defence/sri-lanka-removed-from-fatfs-grey-list/articleshow/71663699.cms?utm_source=contentofinterest&utm_medium=text&utm_campaign=cppst.

கறுப்புப் பட்டியலிற்கு அண்மித்த பட்டியலில் (பசநல டளைவ) இருந்து இலங்கை நீக்கப்பட்டிருந்துங்கூட, இலங்கை அரச அதிகாரிகள், நிதியியல் நடைமுறைச்செயலணியினது (குயுவுகு) சிபார்சுகளை, அதிகரித்தது. அல்லது சுமைமிக்க சிவில் சமூக ஒழுங்குவிதிகளை நியாயப்படுத்தலுக்காகக், கடந்தகாலத்தில் இருந்ததைப் போல, இன்னமும் பயன்படுத்தக்கூடும். இது விசேடமாக, 2019 ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு (ஈஸ்ரர்) தாக்குதலை கருத்தில் எடுத்தது. அதேபோன்று, கோட்டபாய ராஜபக்ஸவின் நவம்பர் 2019 ஜனாதிபதித் தேர்தலின்போதும், இலங்கை சிவில் யுத்தத்தின்போது முன்னைய பாதுகாப்புச் செயலாளர். அவருடைய சகோதரர் மகிந்தவுடன் (முன்னைய ஜனாதிபதி அதேகாலகட்டத்தின்போது) தற்போதைய பிரதம மந்திரி, புதிய ராஜபக்ஸ ஆட்சி இலாபநோக்கற்ற அரசசார்பற்ற அமைப்புகளைக் கண்காணித்து அவற்றைச் சுருக்கவும் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது.[11]

நிதியியல் நடைமுறைச்செயலணியானது அண்மையில் "உலகம் முழுவதும் இன்றியமையாத அறக்கொடைச் சேவைகளை வழங்குவதிலும் இலாபநோக்கற்ற அமைப்புகளின் இன்றியமையாத முக்கியத்துவத்தினையும் தேவையிலுள்ளவர்களுக்கு உதவிகளை வழங்குவதில் உள்ள சிரமங்களையும்" அங்கீகரித்துள்ளது.[12] அதன் விளைவாக, "பெரும்பாலான இலாபநோக்கற்ற அமைப்புகள் சிறியளவு ஆபத்தினை அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியளிக்கும் ஆபத்துகள் எதனையும் கொண்டிருக்கவில்லை" என்பதனால் பரந்துபட்ட ஒழுங்குவிதி அளவீடுகளின் ஊடாக சிவில் சமூகத்தினை சுமையாக்க வேண்டாம் என அரசாங்கங்களுக்கு அறிவுரைத்தது'.[13]

தொடர்ந்திருக்கும் கோவிட்-19 சூழவுள்ள நிலைமையானது இலாபநோக்கற்ற அமைப்புகளின் இன்றியமையாத முக்கியத்துவத்தினை மேலும் வலியுறுத்தியுள்ளது. மீளவும், பின்வருவனவற்றினைக் கருத்தில்கொண்டு இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையினை சுதந்திரமாக தொழிற்பட அனுமதிப்பதன் முக்கியத்துவத்தினை நிதியியல் நடைமுறைச்செயலணியானது அங்கீகரித்துள்ளது:

இந்த உலகளாவிய பொது சுகாதார அவசரநிலைமையானது, கோவிட்-19 மற்றும் அதனுடைய விளைவுகளுடன் சண்டையிடுவதற்கு அறக்கொடைத் தாபனங்களதும் இலாபநோக்கற்ற அமைப்புகளினதும் இன்றியமையாத பணியினைச் சுட்டிக்காட்டியுள்ளது. அறக்கொடைத் தாபனங்களின் கொடைகளும் நடவடிக்கைகளும் சட்டரீதியாகவும் வெளிப்படையான வழிகள் மூலமும் இடையூறு இன்றி வேகமாக செயற்படுவதனையும் நிச்சயப்படுத்துவதற்கான வளைந்துகொடுக்கும் தன்மையினை வழங்க குயுவுகு இனது தராதரங்களை மேம்படுத்த நிதியியல் நடைமுறைச்செயலணியானது இலபாநோக்கற்ற அமைப்புகளுடன் பலவருடங்களாக நெருக்கமாக பணியாற்றியுள்ளது.[14]

நிதியியல் நடைமுறைச்செயலணியுடன் தொடர்புபட்டசாத்தியமானவாதங்களும் சிவில் சமூகத்தின் செயற்றினுள்ளபிரதிவாதங்களும்

**வாதம்:** "இலாபநோக்கற்ற அழைப்புகள், குறிப்பாக பயங்கரவாதத்திற்கு நிதியிடல் துஸ்பிரயோகத்திற்கு இலகுவில் பாதிப்படையக்கூடியவை"

- **பிரதிவாதம்:** நிதியியல் நடைமுறைச்செயலணயா**னது 2016 இல இந்த நிலைப்பாட்டினை நிராகரித்தது.** மாறாக, இலாபநோக்கற்ற அமைப்புகளினால் செய்யப்பட்ட உலகளாவிய பரிந்துரையானது, **இந்தக் கோரிக்கையினை ஆதரவளிக்க எந்தவித ஆதராங்களும் இல்லை** எனவும் இந்தத் தளத்தின் அடிப்படையிலான தராதரங்கள், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் போன்ற அடிப்படை மனித உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதற்கு தடையாகவும் இருந்தன எனவும் நிதியியல் நடைமுறைச்செயலணியினை நம்பச்செய்தது.[15]

---

11 E.g., in December the government moved the NGO Secretariat to the Defense Ministry. Institutions of Disaster Management moved under the purview of Defence Ministry, News 1st, Dec 11, 2019, https://www.newsfirst.lk/2019/12/11/institutions-of-disaster-management-moved-under-the-purview-of-defence-ministry/.

12 FATF, Statement by the FATF President: COVID-19 and measures to combat illicit financing, Apr 1, 2020, http://www.fatf-gafi.org/publications/fatfgeneral/documents/statement-covid-19.html [hereinafter FATF Statement 2020].

13 *Id.*

14 *Id.*

15 Global NPO Coalition on FATF. *Recommendation 8 & NPO Response*. http://fatfplatform.org/special-recommendation-8/; *see also* NíAoláin, supra note 3, at para 31.

"அனைத்து இலாபநோக்கற்ற அமைப்புகளும் இயல்பாகவே உயர்ந்தளவு ஆபத்தில் இல்லை எனவும் சில சிறியளவு ஆபத்திலும் அல்லது அறவே ஆபத்தில் இல்லை" என்பதனையும் அறிந்து பரந்தவகையில், இலாபநோக்கற்ற அமைப்புகள் முழுவதையும் பாதிப்புக்குள்ளாகக்கூடியவை எனக் கையாளும் "ஒரு அளவு அனைத்திற்கும் பொருந்தும்" என்ற ஒழுங்குவிதி அளவீடுகளையும் நிதியியல் நடைமுறைச்செயலணியானது நிராகரித்தது.[16] **இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையாது குறிப்பாக இலகுவில் பாதிப்புக்குள்ளாகக்கூடியவை அல்லது முழுத்துறையினையும் ஒரேமாதிரிக் கையாளும் எந்த வாதமும்** நிதியியல் நடைமுறைச்செயலணியினது 40 சிபார்சுகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ள **ஆபத்தினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையினைப் பின்பற்றுவதற்கான** நிதியியல் நடைமுறைச்செயலணியி**னது சிபார்சுகளைப் பின்பற்றுவதில்லை.** ஆபத்தினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை என்பது கருதுவது, நாடுகள் முதலாவதாக ஆபத்தினை மதிப்பீடு செய்து வரையறுக்கவேண்டும், அதனடிப்படையில், தற்போதுள்ள அளவீடுகள் ஆபத்தினைக் கையாளுவதற்கு போதாது எனின் அளவீடுகளை அறிமுகப்படுத்தலாம்.[17]

**வாதம்:** "இலாபநோக்கற்ற அமைப்புகளானவை பயங்கரவாத அமைப்புகளினால் பயன்படுத்தப்படும் ஆபத்தினைக் குறைப்பதற்கு அதிக கடுமையான ஒழுங்குவிதிகளும் அதிகரித்த மேற்பார்வைக் கட்டுப்பாடுகளும் உதவும்."

- **பிரதிவாதம்:** இறுக்கமான கட்டுப்பாடுகளும் ஒழுங்குவிதிகளும் (உதாரணமாக, பொது முகவர்களினாலும் நிதி அமைப்புகளினாலும் வேண்டப்படும் தகவல்களிலான ஒரு அதிகரிப்பு, தொழில்நுட்பங்களின் காரணமாக சட்டக்காரணிகளினது இடைநிறுத்தம் அல்லது இரத்துச்செய்யப்படல் போன்றன) செயற்றிறனுடையவையாக நிரூபிக்கப்படவில்லை என்பதுடன் உண்மையில் எதிர்மறையானதாக அமையக்கூடும்.[18] அரசினால் கட்டாயப்படுத்தப்படும் கடினமான கோரிக்கைகளும் தொடர்பற்ற தண்டங்களும், கூடுவதற்கான சுதந்திரத்தினை கருத்தில் எடுக்காமை மட்டுமல்லாது சில இலாபநோக்கற்ற அமைப்புகளினை முறைசாராத விதத்தில் இயக்குவதற்கும் ஊக்கப்படுத்துகின்றன. அது அவர்களுடைய பொதுமக்களுக்கான வகைப்பொறுப்பு கூறுவதனை குறைப்பதுடன் ஆபத்துகளை அதிகரிக்கின்றது. அவற்றிற்கு மேலாக, நிதி அமைப்புகள் பணச்சலவைக்கு எதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலிற்கு எதிரான AML/CFT ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தும் போது, ஒரு வழியில் இலாபநோக்கற்ற அமைப்புகளுக்கு வங்கிக் கணக்குகளை திறப்பதனை கடினமாக்குகின்றது, அமைப்புகள் முறைசார் நிதி வழிமுறைகளுக்கு வெளியே இயங்குவதற்கு வற்புறுத்தப்படுகின்றன, உ-ம்: காசுக் கொடுக்கல் வாங்கல்கள் ஊடாக. ஆகையால், **இலாபநோக்கற்ற அமைப்புகளின் செயற்பாட்டு நடவடிக்கைகளை தாமதப்படுத்தும் கட்டுப்பாடுகள், முறைசாராத நிதிக்கொடுக்கல் வாங்கல்களை அதிகரிக்கக்கூடும் என்பதுடன் ஆபத்தினைக் குறைக்காது**.

  இவற்றிற்கும் மேலாக, **உண்மையில் பயங்கரவாதத்திற்கு எதிரான அரசாங்கத்தின் முயற்சிகளில் சிவில் சமூக அமைப்புகள ஒரு முக்கியமான பங்குதாரர்** என உலக சமூகமானது அங்கீகரித்துள்ளதுடன் அவர்களுடைய பணியிலான எந்தவிதக் கட்டுப்பாடுகளும் **பயங்கரவாதத்திற்கு எதிரான முயற்சிகளை எதிர்மறையாக பாதிக்கக்கூடும்.**[19]

  இறுதியாக, **அதிக சிக்கலாகதொரு ஒழுங்குக் கட்டுப்பாடானது செலவினை அதிகரிப்பதுடன்** AML/ CFTஇனை செயற்றிறனான வகையில் மேற்பார்வை செய்வதனை நடைமுறைப்படுத்துவதற்கான

[16] FATF Recommendations, Feb 2012, http://www.fatf-gafi.org/media/fatf/documents/recommendations/pdfs/FATF%20Recommendations%202012.pdf, page 60.
[17] *Id.* at 59.
[18] See, e.g., NíAoláin, *supra* note 3, at para 10: "Recent research shows that there is no evidence that legal restrictions on civil society reduces the number of terrorist attacks within a country. Civil society restrictions do not make a country safe from terrorist attacks; the security rhetoric does not achieve the expected outcomes."
[19] *See, e.g.,* Activities of the United Nations system in implementing the United Nations Global Counter-Terrorism Strategy, Report of the Secretary-General, Apr 20, 2018, A/72/840, https://www.un.org/en/ga/search/view_doc.asp?symbol=A/72/840, para 30: "the General Assembly and the Security Council have recognized that civil society, including non-governmental organizations, can make important contributions to these efforts. It is vital to take full advantage of the potential contributions of civil society organizations, especially with regard to building resilience to violent extremism as and when it is conducive to terrorism, and mitigating the consequences of terrorism." *See also* Resolution adopted by the General Assembly on 26 June 2018, The United Nations Global Counter-Terrorism Strategy Review, July 2 2018, A/RES/72/284, https://undocs.org/A/RES/72/284.

**அரசாங்கத்தின் கொள்ளளவினையும் பெரும்பாலும் விஞ்சிவிடுகின்றது.** இதனைநிதியியல் நடைமுறைச்செயலணியானது அதனது மிக அண்மைய பங்களாதேச பரஸ்பர மீளாய்வு மீட்டலில் அதிகமாக இலக்குப்படுத்தப்பட்ட ஆபத்தினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையினை சிபார்சுசெய்து சுட்டிக்காட்டுகின்றது.[20] இலாபநோக்கற்ற அமைப்புகளுக்கான அதிகளவிலான ஒழுங்குபடுத்தும் நடைமுறைகள் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் ஆபத்தினை குறைப்பது மற்றும் நிதியியல் நடைமுறைச்செயலணியின் தராதரங்களை பூர்த்திசெய்வது ஆகிய இரண்டிலும் தோல்வியடைந்துள்ளது.

**வாதம்:** "நாங்கள் புதிய சட்டவாக்கத்தினை வற்புறுத்த விரும்பவில்லை, ஆனால் நிதியியல் நடைமுறைச்செயலணியானது இதனைஎங்களைச் செய்யவைத்துள்ளது"

- **பிரதிவாதம்:** இலாபநோக்கற்ற அமைப்புகள் தொடர்பாக, நிதியியல் நடைமுறைச்செயலணி சிபார்சுசெய்வது என்னவெனில், அரசானது முதலாவதாக இலாபநோக்கற்ற அமைப்புகளின் ஒரு உபகுழுவானத பயங்கரவாதத்திற்கு நிதியிடும் துஸ்பிரயோகத்தினால் பாதிப்படையும் நிலையில் உள்ளதா அல்லது இல்லையா எனத் தீர்மானித்து, அவ்வாறாயின், எந்த இலாபநோக்கற்ற அமைப்புகளின் உபகுழுக்கள் பாதிப்படையும் நிலையில் உள்ளன, அடுத்தது, அந்த உபகுழுக்களுக்கு தற்போதுள்ள சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் பிரயோகிக்கக்கூடியளவு போதுமானதா என நாடுகள், மீட்டல் செய்யவேண்டும்.[21] **"தற்போதுள்ள ஒழுங்குவிதிகள் அல்லது அளவீடுகள், கட்டுப்பாட்டிலுள்ள இலாபநோக்கற்ற அமைப்புகளுக்கு தற்போதுள்ள பயங்கரவாதத்திற்கு நிதியிடல் ஆபத்திற்கு பதிலளிக்க ஏற்கனவே போதுமானதாக இருக்கலாம்" என** நிதியியல் நடைமுறைச்செயலணி **குறிப்பிடுகின்றது.**[22]அவ்வாறான சந்தர்ப்பத்தில், ஒழுங்குவிதிகளில் எந்த மாற்றமும் அவசியப்படாது. இலகுவில் பாதிப்படையக்கூடிய இலாபநோக்கற்ற அமைப்புகள் என அடையாளம் காணப்பட்டவற்றைப் பாதகாப்பதற்கு தற்போதுள்ள சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் போதுமானதல்ல என்றதொரு ஆபத்துமதிப்பீட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டால் மட்டும் ஒரு அரசானது புதிய சட்ட அளவீடுகளை நடைமுறைப்படுத்தமுடியும். அவ்வாறான அளவீடுகள், அடையாளப்படுத்தப்பட்ட ஆபத்தகளுக்கு கவனம் செலுத்துவதுடன் சமநிலைப்படுத்தப்பட்டமாகவும் இருத்தல் வேண்டும்.[23] **பயங்கரவாதத்திற்கு நிதியிடல் துஸ்பிரயோகத்திலிருந்து இலாபநோக்கற்ற அமைப்புகளைப் பாதுகாப்பதற்கு நாடுகள் எடுக்கும் எந்த அளவீடுகளும், சட்டரீதியான ஆதரவளிக்கும் நடவடிக்கைகளுக்கு தடங்கலாகவோ அல்லது ஊக்கத்தினை இழக்கச்செய்வதாகவோ இருத்தல்கூடாது.**[24]

  இலங்கை விடயத்தில், ஏதாவது இலாநோக்கற்ற அமைப்புகள் பாதிப்படையும் நிலையில் உள்ளதா எனவரையறுப்பதற்கு, அரசாங்கம், இலாநோக்கற்ற அமைப்புகளின் துறையுடன் நெருக்கமான வகையில் இணைப்பாக்கம் செய்து ஒரு தேசியமட்ட ஆபத்து-மதிப்பீட்டினை நடாத்தவேண்டும். அவ்வாறு இருக்குமாயின், தற்போதுள்ள சட்டங்களும் ஒழுங்குவிதிகளும், தற்போதுள்ள குற்றவியல் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டங்களால் வழங்கப்பட்டுள்ள அளவீடுகள் இந்த ஆபத்துகளுக்கு பதிலளிக்கப் போதுமானவையா என்பதனை கருத்தில் எடுக்கவேண்டும்.மிகப்பரந்த அல்லது முழுத் துறையினையும் இலக்குப்படுத்தும் சட்டங்கள் பொருத்தமான பொறிமுறைகளல்ல, இனது கரிசனைகளுக்கு செயற்றிறனுள்ள வகையில் பதிலளிக்க அவை தவறுகின்றன.

**வாதம்:** "இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையினை முழுமையாக அரசாங்கமானது மேற்பார்வைசெய்யவேண்டும்: அல்லது, துஸ்பிரயோகப்படுத்தப்படக்கூடிய *இலாபநோக்கற்ற அமைப்புகளை' தேடிப்பிடிக்கும் முகமாக*'" ஆகக்குறைந்தது, அவற்றில் பெரும்பான்மையானவற்றினை."

**பிரதிவாதம்: இந்**த வாதமானது, நிதியியல் நடைமுறைச்செயலணியினால் வேண்டப்படும் ஆபத்தினை-அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைக்கு எதிராகச் செல்கின்றது. பணச்சலவைக்கு எதிரான/

[20] See Bangladesh MER, FATF, Oct 2016, http://fatf-gafi.org/media/fatf/documents/reports/mer-fsrb/APG-MER-Bangladesh-2016.pdf, at page 5, 9, 13, 62.

[21] FATF Recommendations, supra note 16, at page 60.

[22] *Id.* at 61.

[23] *Id.*

[24] *Id.* at 59.

பயங்கரவாதத்திற்கு நிதியிடலிற்குஎதிரான (AML/CFT **ஒழுங்குவிதிகள் ஒரு மேலதிக நிர்வாகச் சுமையினை சுமத்துவதுடன் அரசாங்கத்தின் நடைமுறைப்படுத்தும் பொறுப்புகளுக்கு அவர்களின் முகவர்களின் வரையறுக்கப்பட்ட வளங்களில் மேலதிக அழுத்தத்தினையும் இடுகின்றது**.

FATF's இனது கவனம் செலுத்தப்பட்ட அணுகுமுறையானது, உண்மையில் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் குற்றச்சாட்டிற்குள்ளாக்கப்படும் ஆபத்திலுள்ள இலாபநோக்கற்ற அமைப்புகளை மேற்பார்வைசெய்வதற்கு வளங்களின் பயன்பாட்டினை உச்சப்படுத்துவதற்கு எதிராக இந்தநோக்கத்திற்காக, முழுமையான இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையினை ஒரு வினைத்திறனற்ற வகையில் "கண்காணிக்கும்" முழுமையான முயற்சி (பங்காளதேச உதாரணத்தில் இருந்தது போன்று, மேலே பார்க்கவும்).[25]ஆகையால் முழுமையான துறையினையும் இலக்குப்படுத்தும் அளவீடுகள், பெரும்பாலும் நிதியியல் நடைமுறைச்செயலணியின் தராதரங்களை பூர்த்திசெய்வதற்கு குறிப்பானவையல்ல என்பதுடன் அதற்கென உருவாக்கப்பட்டவையுமல்ல.

**வாதம்:** *"இலாபநோக்கற்ற அமைப்புகள், உணராமலே, பயங்கரவாத அமைப்புகளினால் துஸ்பிரயோகப்படுத்தப்படலாம் அல்லது இலாபநோக்கற்ற அமைப்புகளாக மறைந்திருக்கும் பயங்கரவாத அமைப்புகள் இருக்கலாம்."*

- **பிரதிவாதம்:** இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையில் துஸ்பிரயோக சம்பவங்கள் மிகக்குறைவானதாகவே இருக்கையில், நடைபெறும் கால அளவும் துஸ்பிரயோகத்தின் கடுமையின தன்மையும் குறைவானதாகவும், பலநாடுகளில் அவை இல்லைஎனவும் ஆதாரங்கள் முன்வைக்கிறது.[26]

- ஆதாரங்கள் இன்றி, சிலநிபுணர்கள், இலாபநோக்கற்ற அமைப்புகள் உண்மையில் இலகுவில் பாதிப்படையும் தன்மையுடையவை என இலாபநோக்கற்ற அமைப்புகளின் துஸ்பிரயோகத்தின் ஒரு சில அடையாளரீதியான சம்பவங்களைக் குறிப்பிடுகின்றனர்.[27] நிதியியல் நடைமுறைச்செயலணி தராதரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களுக்காக துஸ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட இலாபநோக்கற்ற அமைப்புகள், ஒரு துறையாக குறிப்பாக பாதிப்படையும் தன்மையினையுடையதென அவ்வாறான உதாரணங்கள் முன்வைத்துக்காட்டவில்லை. அத்துடன், **இன்றுவரை இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையானது தனியார் துறையினை விடவும் இந்த வகையான குற்றங்களுக்கான ஆபத்தில் இருக்கக்கூடிய வாய்ப்புண்டு என்பதனை வெளிக்காட்டும் எதுவித ஆதாரங்களும் முன்வைக்கப்படவில்லை.**[28]

**வாதம்:** *"பணச்சலவை ஒரு பெரிய கரிசனை என்பதுடன் ஆகையால் பணச் சலவைக்கு எதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலிற்கு எதிரான (AML/CFT) தராதரங்கள் ஆபத்திலுள்ள இலாபநோக்கற்ற அமைப்புகளில் கடப்பாடு ஆக்கப்படலாம்."*

- **பிரதிவாதம்:** இலாபநோக்கற்ற அமைப்புகள் தொடர்பாக, **சிபார்சு 8 ஆனது பயங்கரவாதத்திற்கு நிதியிடல் பற்றி மட்டுமே குறிப்பிடுகின்றது.** பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கு எதிரான (AML) அளவீடுகள், ஏனைய சிபார்சுகளின் (10, 11, 20, 22, and 23) பகுதியாக உள்ளது, குறிப்பாக நிதி அமைப்புகள், பணப்பரிமாற்ற சேவைகள், கேளிக்கை விடுதிகள், காணித்தரகர்கள், இரத்தினக்கல்/பெறுமதியான உலோக நடவடிக்கைகள், சட்டத்தரணிகள், நொத்தாரிசுகள் மற்றும் கணக்காளர்கள் போன்றவற்றுடன் குறிப்பாக இணைக்கப்படுகின்றது. இலாபநோக்கற்ற அமைப்புகள் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன் **அரசாங்கமானது, இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையானது பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கு எதிரான குற்றங்களில் இலகுவில் பாதிப்படையக்கூடியது என்பதற்கு இதுவரை எவ்வித**

[25] Asia/Pacific Group on Money Laundering (APG), *Anti-money laundering and counter-terrorist financing measures*, Bangladesh, Mutual Evaluation Report, Oct 2016, page 129, http://www.fatf-gafi.org/media/fatf/documents/reports/mer-fsrb/APG-MER-Bangladesh-2016.pdf.

[26] Transnational NPO Working Group on FATF, "NPO Sector Risk and Risk Mitigation Survey Analysis," February 2014, http://fatfplatform.org/wp-content/uploads/2015/02/NPO-Sector-Typology-Position-Paper-FATF.pdf.

[27] See, e.g. Organizaciones *Sin Fines de Lucroenesquemas de lavado y evasión fiscal (Non-profit organizations are involved in money laundering and tax evasion schemes)*. http://www.lavadodinero.com/varios/editorial/Presentacion_ONG_2013.pdf.

28 *Report of the Special Rapporteur on the rights of freedom of peaceful assembly and of association*, A/70/266 (4 August 2015), http://freeassembly.net/wp-content/uploads/2015/09/A_70_266_ENG.pdf, ¶ 52.

**ஆதாரங்களையும் வழங்கவில்லை.** ஆகையால், ஏனைய துறைகளுக்கு பிரயோகிக்கப்படும் நிதியியல் நடைமுறைச்செயலணியின் கடப்பாடுகள் இலாபநோக்கற்ற அமைப்புகளுக்கு பொருத்தமுடையதல்ல: அவை வாடிக்கையாளர்களுடன் கூடிய இலாபமீட்டும்-தொழில்வாண்மைப் பிரிவுகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தக் காரணங்களுக்காக, **இலாபநோக்கற்ற அமைப்புகளில் பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கு எதிரான அளவீடுகளை வற்புறுத்துதல் அவசியமானதல்ல,** ஆகையால் அவ்வாறு செய்வதானது சிபார்சு 8 இனது நிபந்தனைகளை தெளிவாக மீறுவதாக இருக்கும்.

வாதம்: "இலாபநோக்கற்ற அமைப்புகள் யாருக்கும் பொறுப்புக்கூறுவதில்லை என்பதுடன் அவர்கள் என்னசெய்கின்றார்கள் எனஎவருக்கும் தெரியாது."

- **பிரதிவாதம்:** இந்த வாதமானது உண்மையைப் புறக்கணிக்கின்றது. பதிவு-செய்யப்பட்ட "**இலாபநோக்கற்ற அமைப்புகள், அரசாங்க அதிகாரிகளுக்கு அறிக்கைகளையும் ஏனைய நடவடிக்கை விபரங்களையும் ஒழுங்காக சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.** (உ-ம்: வரிப் பணியகங்கள்) இலாபநோக்கற்ற அமைப்புகள் நிதி மற்றும் நிகழ்ச்சித்திட்ட அறிக்கைகள் ஊடாக தமது நிதி வழங்குநர்களுக்கும் உள்ளக அறிக்கையிடல் மற்றும் தமது நிறைவேற்றுச் சபைக் கூட்டங்கள் ஊடாக தமது அங்கத்தவர்களுக்கும் பொறுப்புக்கூறுபவர்களாக உள்ளனர். (உ-ம். மதியுரைஞர் சபைகள், பணிப்பாளர் சபைகள்)

  **குறீப்புர்கு** நிதியியல் நடைமுறைச்செயலணி, பயங்கரவாதத்திற்கு நிதியிடலிற்கு எதிரான அளவீடுகள் சட்டவாக்கத்தினை மட்டுமன்றி FATF CFT இலாபநோக்கற்ற அமைப்புகளுக்கான சுய-ஒழுங்குபடுத்தல்கள், உள்ளக சட்டங்கள் மற்றும் நன்னடத்தைக் கோவை போன்ற 'மென்பொருள்' அளவீடுகளின் முக்கியத்துவத்தினையும் அங்கீகரிக்கின்றது. இவை சிபார்சு 8 குறிக்கோள்களை அடைவதில் அரசாங்கத்திற்கு உதவிபுரியும் பெறுமதியான வழிகளாக கருத்தில் எடுக்கப்படுகின்றன. **இலங்கையிலுள்ள இலாபநோக்கற்ற அமைப்புகள், தமது துறையில் பொதுமக்களுக்கு வகைப்பொறுப்புக் கூறுதல் மற்றும் பகிரங்கத்தன்மை ஆகியவற்றின் மேலும் மேம்படுத்த சுய-ஒழுங்கு அளவீடுகளை பின்பற்றுவதற்குப் பணியாற்றிக்கொண்டிருக்கின்றன.**

  இலாபநோக்கற்ற துறையானது குறைவான **வகைப்பொறுப்புடையது அல்லது வரிச்சட்டங்களை அதிகளவில் மீறுகின்றது என்பதற்கோ அல்லது ஏனைய துறைகளை விடவும் நிதிக்குற்றங்களில் ஈடுபடுகின்றது என்பதற்கோக்** அமைப்புகளுக்கான எதுவித ஆதாரமும் இல்லை எனவும் சமாதானமாக ஒன்றுகூடுதல் மற்றும் இணைதல் சுதந்திரத்திற்கான உரரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர், மேலும் குறிப்பிட்டுள்ளார்.[29]

**வாதம்:** "இலாபநோக்கற்ற அமைப்புகளுக்கு எந்தவிதக் கட்டுப்பாடுகளும் இல்லை. அவை பெரும்பாலும் ஒரு தனிப்பட்ட நபரினாலேயே முகாமைத்துவம் செய்யப்படுகின்றன.

- **பிரதிவாதம்: இலாபநோக்கற்ற அமைப்புகள் ஆளுகை மற்றும் கட்டுப்பாடுகள்** என்பவறினை உள்ளடக்கிய **பல்தரப்பட்ட கட்டங்களில்** மற்றவர்களுக்கு மத்தியில் **கேள்விக்கு உட்படுத்தப்படுகின்றனர்.** தேசிய மற்றும் நாட்டு-மட்ட சட்டங்கள்: நிதிவழங்குநரின் தராதரங்களும் கோரிக்கைகளும்: உப-சட்டங்களின் ஊடாக தன்னார்வத்தில் தராதரங்களை பின்தொடர்தல் (சட்ட தராதரங்களுடன் அவை ஒத்துழைக்க வேண்டும்): அத்துடன் சுய-ஒழுங்குபடுத்தல்கள் தராதரங்கள் மற்றும் நிறுவனத்தினாலேயே சுயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டவைகள். உள்ளக ஆளுகையினதும் கணக்கியல் நடைமுறைகளும் சட்ட ஆளுமையுடன் இலாபநோக்கற்ற அமைப்புகளை ஒழுங்குபடுத்த பல சட்டங்களும் தராதரங்களும் பயன்படுத்தப்பட்டமை ஆளுகையினதும் நிர்வாகக் கட்டுப்பாடுகளினதும் சட்டங்களை விஸ்தரித்து உபசட்டங்களினால் இலாபநோக்கற்ற அமைப்புகளை இட்டுச்செல்வதற்கு குறிப்பான மட்டங்களை கோரிநிற்கின்றது.

  **இலாபநோக்**கற்ற அமைப்புகளின் துறைபற்றி அல்லது ஒழுங்குபடுத்தும், பல்தரப்பட்ட ஆளுகை அணியானது, இலாநோக்கற்ற அமைப்புகளின் நடவடிக்கைகளின் தன்மை, அவர்களுடைய உள்ளக

[29] *Id.*

ஆட்சி முறைகள், அவர்கள் இயங்கும் சூழல், அல்லது இலாநோக்கற்ற அமைப்புகளின் பணச்சலவைக்கு எதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலிற்கு எதிரான (AML/CFT) சட்டங்களின் எதிர்மறையான தாக்கங்கள் பற்றிய குழப்பத்தினையும் சந்தேகத்தினையும் பெருக்கி, அரச அதிகாரிகள் குறைவான அறிவினையே கொண்டுள்ளனர். உதாரணமாக, அரசானது சமூகமளிக்காத, நகர்ப்புறப் பகுதிகளில் இருந்து தூரத்திலுள்ள பகுதிகளுக்கு சில அமைப்புகள கல்வி, சுகாதாரம், அல்லது நலன்புரி சேவைகளை சமூகங்களிற்கு வழங்குகின்றனர். அமைப்புரீதிய அல்லது முறைசார் நிதிச்சேவைகள் அவ்வாறான சமூகங்களில் இல்லாதிருக்கக்கூடும். இலாபநோக்கற்ற அமைப்புகளை முறைசாராத கொடுக்கல்வாங்கல்களை செய்வதற்கு அவை இலாநோக்கற்ற அமைப்புகளை வற்புறுத்தக்கூடும். கலந்துரையாடல்கள், இலாபநோக்கற்ற அமைப்புகளின் நடவடிக்கைககள் பற்றிய கண்ணோட்டத்தினை தெளிவாக்கக்கூடும்.

**வாதம்**: "நிதியியல் நடைமுறைச்செயலணி தராதரங்கள் என்பதுடன் அரசானதுதான் விரும்பினால் இன்னமும் அதிகளவிலான கட்டுப்பாடுகளை கட்டாயப்படுத்த முடியும்."

- பிரதிவாதம்:**அரசினால் கட்டாயப்படுத்தப்படும் எந்தக் கட்டுப்பாடுகளும் ஐக்கியநாடுகள் மற்றும் சர்வதேசமனிதஉரிமைகள் சட்டத்தின் உடன்படிக்கையுடன் உடன்பாடுடையவகையில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என**நிதியியல் நடைமுறைச்செயலணி சுட்டிக்காட்டுகின்றது.[30] ஒரு அரசானது ஆகக் குறைந்தளவு தராதரங்களுக்கு அப்பால் கட்டுப்பாடுகளை கட்டாயப்படுத்தினால், அது கூடுவதற்கான சுதந்திரத்திற்கான உரிமையினை உத்தரவாதப்படுத்தும் சர்வதேச மனித உரிமைகள் சரத்தின் கீழ் அரசகடப்பாடுகளுடன் ஒத்திசைவானவை என்பதனை நிச்சயப்படுத்த வேண்டும் என்பதனையே இது கருதும். **மேலும், ஒழுங்குபடுத்தும் அளவீடுகள், ஒரு இலாப நோக்கற்ற அமைப்பின் விவகாரங்களில் நியாயமற்ற தலையீடுகளை விதிக்கக்கூடாது.** பணச்சலவைக்கு எதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலிற்கு எதிரான (AML/CFT) அளவீடுகள், **இலாப நோக்கற்ற அமைப்புகளின்** சட்டரீதியான ஆதரவளிக்கும் நடவடிக்கைகளை தடைசெய்யக்கூடாது எனவும் நிதியியல் நடைமுறைச்செயலணி குறிப்பிட்டுள்ளது. அரசினால் முன்னெடுக்கப்படும் எந்த நடவடிக்கையும், முடிந்தளவு இயலுமானவரை, இலாபநோக்கற்ற அமைப்புகளினால் செய்யப்படும் "உதவியளிக்கும் நடவடிக்கையின் அப்பாவியானதும் சட்டரீதியானதுமான பயனாளிகளிலான எதிர்மறைத் தாக்கத்தினை மிகக்குறைவானதாக்க வேண்டும்."[31]

  இலங்கை அரசாங்கமானது, இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையினைப் பாதிக்கும் எந்த அளவீடுகளைத் திட்டமிடும் போதும் இந்த வரையறைகளை கணக்கில் எடுக்கவேண்டும் என்பதுடன் அவ்வாறான அளவீடுகள் ''ஆபத்தில் உள்ள'' இலாபநோக்கற்ற அமைப்புகளை பிரதானமாக இலக்குப்படுத்த வேண்டும் என்பதனை ஞாபகத்தில்கொள்ள வேண்டும். (உண்மையாக, ஒரு பொறுப்புக்கூறும் வகையிலான வெளிப்படைத்தன்மையுடைய ஆபத்து மதிப்பீட்டு அணுகுமுறையினூடாக வரையறுக்கப்பட்டது, இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையுடன் கலந்தாலோசித்து விருத்திசெய்யப்பட்டது)

**வாதம்**: "ஆபத்தானது ஒரு பங்குபற்றுதல் அல்லது சமூக செயல்முறையில் தீர்மானிக்கப்படல் வேண்டும் எனநிதியியல் நடைமுறைச்செயலணி கோரவில்லை. அது எங்கள் தெரிவிற்கு விடப்பட்டுள்ளது."

- **பிரதிவாதம்:** இலாபநோக்கற்ற அமைப்புகளின் ஆபத்து மதிப்பீடுகள் எவ்வாறு நடாத்தப்படல் வேண்டும் என்பது அரசின் தெரிவாகுமென்ற இவ்விடயம் சரியானதாகவிருக்கையில், ஆபத்து மதிப்பீடுகளுக்கான நிதியியல் நடைமுறைச் செயலணியினது 2019 பிந்திய வழிகாட்டுதல்களானவை, இலாபநோக்கற்ற அமைப்புகளுடன் இணைந்தவகையில் ஆபத்து மதிப்பீடுகள் பற்றிய கொசோவா மற்றும் ஹைறிஸ்தானிலிருந்தான உதாரணங்களை வழங்கி **இணைந்தவகையிலான அணுகுமுறையிலும் இலாபநோக்கற்ற அமைப்புகளுடனான ஈடுபாட்டிலும்** கவனம் செலுத்துகின்றது.[32]

---

[30] FATF Recommendations, *supra* note 16, at page 58.

[31] *Id.* at 59.

[32] See FATF Report, *Terrorist Financing Risk Assessment Guidance*, July 2019, http://www.fatf-gafi.org/media/fatf/documents/reports/Terrorist-Financing-Risk-Assessment-Guidance.pdf, pages 49-50.

அனைத்து இலாபநோக்கற்ற அமைப்புகளும் இயல்பாகவே ஆபத்தில் இல்லை என்பதுடன் சில குறைந்தளவான அல்லது அறவே ஆபத்தற்ற நிலையில் இருக்கலாம் என்பதனால், நாடுகள், இலாபநோக்கற்ற அமைப்புகளின் ஒரு உபகுழுவினை அடையாளப்படுத்துவதற்கு – அவ்வாறு ஒன்று இருக்குமாயின் - பயங்கரவாதத்திற்கு நிதியிடல் துஸ்பிரயோகத்திற்கு இலகுவில் பாதிப்படையக்கூடிய நிலையில் - பொருத்தமான தகவல்களின் அனைத்து வளங்களையும் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் எனநிதியியல் நடைமுறைச் செயலணியானது சிபார்சுசெய்கின்றது.[33] அந்த உபகுழுவினை அடையாளப்படுத்தும் நோக்கத்திற்காக, இலாபநோக்கற்ற அமைப்புகளின் இலகுவில் பாதிப்படையும் தன்மைகள் மற்றும் துஸ்பிரயோகத்தில் இருந்து இலாபநோக்கற்ற அமைப்புகள் தம்மைப் பாதுகாக்க எடுக்கக்கூடிய வழிமுறைகள் பற்றி விழிப்புணர்வினை அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள், இலாபநோக்கற்ற அமைப்புகளை அடையும் வகையில் அரசானது அறிமுகப்படுத்தவேண்டும் என நிதியியல் நடைமுறைச்செயலணியானது சிபார்சுசெய்துள்ளது.[34] நிதியியல் நடைமுறைச்செயலணியினால் அண்மையில் நடாத்தப்பட்ட நாடுகளின் மீளாய்வுகள், அரசாங்கங்கள் இலாபநோக்கற்ற அமைப்புகளை சென்றடைவதற்கான நடவடிக்கைகளை நடாத்தியுள்ளதா என்பதனையும் இலாபநோக்கற்ற அமைப்புகள் எதிர்பார்க்கப்படும் ஆபத்துகள் பற்றிய கலந்துரையாடல்களில் அல்லது கல்விநிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றியுள்ளார்களா என்பதனையும் கருத்தில் எடுத்துள்ளது.

பல நாடுகள் சிபார்சு 8இற்கு கீழ்ப்படிதலில் குறைந்தளவான புள்ளிகளையே பெற்றுள்ளனர், ஏனெனில் அவர்கள் இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையினை அணுகவில்லை.[35] சிபார்சு 8இற்கு பகுதியாக அல்லது கீழ்ப்படிதலற்ற நிலை என்பது அரசானது சரியான செயல்முறையினை பின்பற்றத் தவறியமையின் பெறுபேறாகும், நிதியியல் நடைமுறைச்செயலணியினால் அதனது மொழிபெயர்ப்புக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது போன்று, “கறுப்புப் பட்டியலிடப்பட்ட” நாடுகள் என்ற ஆபத்திற்கு பங்களிக்கலாம். அதாவது “உயர் - ஆபத்துக் கட்டுப்பாடுகள் ஒரு நடவடிக்கைக்கான அழைப்பிற்கு இட்டுச்செல்லலாம்” என நம்பப்படுகின்றது. “கறுப்புப்பட்டியலானது சாத்தியமான பொருளாதாரத் தடைகள், கடனுக்கான வரைறுக்கப்பட்ட வாய்ப்புகள் மற்றும் ஏனைய நிதி மற்றும் முதலீட்டுத் தாக்கங்களை உள்ளடக்கிய தண்டங்களினை பெறுபேறாக்கலாம்.” ஆபத்தினை-அடிப்படையாக் கொண்ட அணுகுமுறையினை பின்பற்றுதலும் இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையுடனான தாராளமான கலந்துரையாடல்கள் மற்றும் அடைதல் என்பவற்றினை மேற்கொள்ளல் என்பது நிதியியல் நடைமுறைச்செயலணியின் தராதரங்களுடன் ஒத்துழைப்பதற்கும் கறுப்புப்பட்டியலினைத் தவிர்ப்பதற்கும் அத்தியாவசியமானது.

**வாதம்:** “இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறைசார் ஆபத்து மதிப்பீட்டினை செய்யும் போது இலாபநோக்கற்ற அமைப்புகளின் அபிப்பிராயங்களை கருத்தில் எடுக்கவேசெய்தது”. [ஆனால் “கலந்துரையாடப்பட்ட இலாபநோக்கற்ற அமைப்புகள் பிரதிநிதிகள் அல்ல அல்லது அவையனைத்தும் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியுடன் தொரடப்புபட்டுள்ளன, அல்லது இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறைசார் ஆபத்தினை எவ்வாறு வரையறுப்பது என்பது பற்றிய கலந்துரையாடல்களைவிட அரசானது பயிற்சி செயலமர்வில் துறையினர் பங்குபற்றுவதற்கு ஒழுங்குபடுத்தியது.]

- **பிரதிவாதம்:** “இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையின் ஒரு சிறிய பகுதியினருடன் மட்டும் அரசானது கலந்துரையாடல் செய்வது போதுமானதன்று. இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறைசார் ஆபத்து மதிப்பீடு ஒன்றினை நடாத்தும் நோக்கத்திற்காக அரசினால் ஒழுங்குபடுத்தப்பட்ட கூட்டங்களில் ஒருசில இலாபநோக்கற்ற அமைப்புகளே பங்குபற்றியதாக, பணச்சலவைக்கு எதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலிற்கு எதிரான (AML/CFT) மற்றும் நிதியியல் நடைமுறைச்செயலணியின் தராதரங்கள் பற்றிய அறிவுடைய இலாபநோக்கற்ற அமைப்புகளின் தலைவர்கள் மத்தியில் இலாபநோக்கற்ற சட்டங்களுக்கான சர்வதேச நிலையத்தினால் ICNL நடாத்தப்பட்ட ஆய்வானது வெளிக்கொணர்கின்றது. பதிலாக, அரசானது, இலாபநோக்கற்ற அமைப்புகள், இலாபநோக்கற்ற அமைப்புகளின் வலையமைப்புகள், இலாபநோக்கற்ற அமைப்புகளின் சுய-ஒழுங்குபடுத்தல்கள் அமைப்புகள் மற்றும்

[33] FATF Recommendations, *supra* note 16, at page 60.
[34] *Id*.
[35] FATF, Mutual Evaluations. http://www.fatf-gafi.org/publications/mutualevaluations/?hf=10&b=0&s=desc(fatf_release date).

நிதி அமைப்புகள் என்பவற்றுடன் இணைந்து பணியாற்றுவதனை, இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையினை சென்றடையும் அரச கடப்பாட்டுடன் ஒத்துழைக்கும் நல்ல நடைமுறையாக நிதியியல் நடைமுறைச்செயலணியானது சிபார்சுசெய்யகின்றது.[36] **இலாபநோக்கற்ற அமைப்புகளுடனான கலந்தாலோசனையானது**, முழுமையான துறையினை உண்மையாக பிரதிபலிக்கும் ஒரு ஆபத்து மதிப்பீட்டிற்காக, நிதியியல் நடைமுறைச்செயலணியின் கடப்பாடுகளை **பூர்த்திசெய்வதாயின் பிரதிநிதித்துவமுடையதாகவும் பரந்ததாகவும் இருத்தல்வேண்டும்.**

**வாதம்:** "இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையினை கலந்தாலோசிக்கவும் ஆபத்து மதிப்பீட்டிலும் கொள்கை உருவாக்கத்திலும் ஈடுபடுத்தவும் அமைச்சரவை விரும்புகின்றது, ஆனால் எமக்கு பணியாளர்களின் கிடைப்பனவில் வரையறைகள் உள்ளன."

- **பிரதிவாதம்: ஆபுத்து மதிப்பீட்டில் முதலீடுசெய்வதானது நீண்டகாலத்தில் வளங்களைப் பாதுகாக்கும்.** செயற்றிறனுள்ள ஆபத்தினை அடிப்படையாகக்கொண்ட பணச்சலவைக்கு எதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலிற்கு எதிரான (AML/CFT) தராதரங்களும் கொள்கைகளும் **ஒரு** விகிதசமமற்றளவு நேரத்தினை ஆபத்து சிறிதளவுள்ள அல்லது எதுவுமற்ற இலாநோக்கமற்ற அமைப்புகளுக்கு செலவழிப்பதிலிருந்து மேற்பார்வை முகவர்களை தடுக்கும். இந்த இலாநோக்கற்ற அமைப்புகளிலான அறிக்கையிடும் சுமைகளையும் ஏனைய கட்டுப்பாடுகளையும் குறைப்பதானது அரச அதிகாரிகள், இலாநோக்கமற்ற அமைப்புகளின் துறையுடன் கலந்துரையாடி அடையாளப்படுத்துவதற்கு இன்னமும் வளங்களை வழங்குவதுடன் (ஏதாவது இருப்பின்) ஆபத்திலுள்ள இலாபநோக்கற்ற அமைப்புகளின் உபகுழுக்களையும் மேலும் வினைத்திறனுள்ள வகையில் மேற்பார்வைசெய்யவும் இடமளிக்கும். இவ்வழியில், அரசானது சட்ட, ஒழுங்கு மற்றும் இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையினை தொடர்ச்சியாக சென்றடைதல் உள்ளிட்ட நடைமுறைப்படுத்தல் அளவீடுகளை செயற்றிறனுள்ள வகையில் நடைமுறைப்படுத்தி நிதியியல் நடைமுறைச்செயலணித் தராதரங்களை பூர்த்தியாக்கக்கூடும்.[37]

**வாதம் :**"இலாபநோக்கற்ற அமைப்புகளின் நிதிக்கொடுக்கல் வாங்கல்கள் பற்றி இறுக்கமான கண்காணிப்பினைக் கொண்டிருக்கவேண்டும், ஏனெனில் அவை பாரிய ஆபத்துகளுடன் சம்பந்தப்பட்டுள்ளன."

- **பிரதிவாதம்:** இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையின் ஆபத்து பற்றிய ஒரு அதீதமான கண்ணோட்டத்தின் அடிப்படையில் நிதிஅமைப்புகளினால் வற்புறுத்தப்படும் கட்டுப்பாடுகளை சிரேஸ்ட விசாரணை அலகு (FIU) அதிகாரிகள் அறிந்துள்ளனர். **இலாபநோக்கற்ற அமைப்புகள் மற்றும் அவர்களுடைய பயனாளிகள் ஆகிய இருவரும் இலாபநோக்கற்ற அமைப்புகளைச் சம்பந்தப்படுத்திய கொடுக்கல் வாங்கல்களில் உள்ள ஆபத்துகளைத் தவிர்ப்பதற்கான வங்கி நடைமுறைகளின் பெறுபேறுகளின் காரணமாக துன்பத்திற்குள்ளாகியுள்ளன என** நிதியியல் நடைமுறைச்செயலணி **தலைவர் குறிப்பிட்டுள்ளார்.**[38] அவ்வாறான நடைமுறைகள் இலாபநோக்கற்ற அமைப்புகளை நிதிக் கொடுக்கல்வாங்கல்களுக்கும் அதிகரிக்கும் ஆபத்துகள் மற்றும் பணச்சலவைக்கு எதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலிற்கு எதிரான (AML/CFT) குறிக்கோள்களுக்குப் பதிலளித்தல் என்பவற்றிற்கு முறைசாராத வழிமூலங்களில் தங்கியிருப்பதற்கு வலியுறுத்துகின்றது. ஆபத்தினை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளின் சரியான நடைமுறைப்படுத்தலுக்கான பரஸ்பர புரிந்துணர்வினை பேணுவதற்கு அரசானது நிதித்துறையுடன் இணைந்துகொள்வதனை ஒரு நல்ல நடைமுறையாக நிதியியல் நடைமுறைச்செயலணி அடையாளப்படுத்துகின்றது. இலாபநோக்கற்ற அமைப்புகளுடனான,[39] கலந்துரையாடலின் ஊடாக அரசு மற்றும் நிதித்துறை என்பன அனைத்து சாராரிற்கும் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறான ஆபத்தினைக் குறைக்கும் வினைத்திறனுள்ள வழிவகைகளை அடையாளம் காணல் வேண்டும்.

**வாதம்:** "அமைப்புகளின் கட்டாயமான பதிவினை வலியுறுத்தாமல் நிதியியல் நடைமுறைச்செயலணியினது

[36] Best Practices on Combating the Abuse of Non-Profit Organisations, ¶25, http://www.fatf-gafi.org/publications/fatfrecommendations/documents/bpp-combating-abuse-npo.html.
[37] FATF Recommendations, *supra* note 16, at page 59-60.
[38] A Plus, *Keeping it clean*, Feb 2018, https://aplusmag.goodbarber.com/home-order/c/0/i/20307420/keeping-it-clean.
[39] Best Practices, *supra* note 36, at ¶71.

கடப்பாடுகளுக்கு நாம் கீழ்ப்பணியமுடியாது.”

**எதிர்வாதம்: சர்வதேசச் சட்டத்தின் கீழ் தனிப்பட்டவர்கள் அமைப்புகளைஉருவாக்கவும் பதிவினைநாடாமல் இயங்கவும் முடியும். அமைப்புகளின் கட்டாயமான பதிவிற்கான எந்தக் கோரிக்கைகளும் சர்வதேச சட்டத்திற்கு எதிராக செல்வதாகும்.** ஆகையால் இது சமாதானமாகக் கூடுவதற்கும் இணைவதற்குமான சுதந்திரத்திற்கான உரிமைகள் பற்றிய விசேட அறிக்கையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட, நாடுகளுக்கு “பதிவு இல்லாத அமைப்புகள் இயங்குவதற்கு அனுமதிக்கும் வகையில் தன்னார்வத்திலான பதிவு நிர்வாக முறை ஒன்றினை அனுமதிக்கும் வகையில்”[40] பல ஜனநாயக நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு மிகச்சிறந்த நடைமுறையாகும். ஏனையவர்களுக்கு பதிவுசெய்வதற்கான உரிமையானது அவர்களது கருத்துகளுடன் அதிகாரத்திலுள்ளவர்கள் உடன்படாவிட்டால் எதேச்சையாக மறுக்கப்படுகையில் பல அமைப்புகள் பதிவுசெய்யக்கூடிய இயலுமையை அல்லது அதனை அடையக்கூடியதன்மையை கொண்டிருக்காதிருக்கக்கூடும்.[41]

சர்வதேசச் சட்டத்துடன் பாரம்பரியமாக இணைந்திருக்கையில், நிதியியல் நடைமுறைச்செயலணியினது கடப்பாடுகளை பூர்த்திசெய்ய மிகவும் வினைத்திறனான வழிகள் வேறும் உள்ளன: உண்மையாக **சிவில் சமூக அமைப்புகளின் தன்னார்வத்திலான பதிவினை அனுமதிக்கையில் பல கட்டுப்பாடுகள் நிதியியல் நடைமுறைச்செயலணிக்கு கீழ்ப்படிவதாக உள்ளன.**[42] அரசாங்கமானது தன்னார்வத்திலான பதிவு நிர்வாகத்தினைப் பேணவேண்டும் என்பதுடன் இலாபநோக்கற்ற அமைப்புகளின் துறையானது நிதியியல் நடைமுறைச்செயலணியுடனும் சர்வதேச தராதரங்களுடனும் கீழ்ப்படிவுள்ளதான நிலையினை அடைய கலந்துரையாடலையினையும் அடைவினையும் முன்னேற்றுவதற்குப் பணியாற்றவும் வேண்டும்.

**வாதம்**: *“கோவிட்-19 அச்சுறுத்தல், அதீத நடைமுறைகள் என்பவற்றினை உள்ளடக்கி சிவில் சமூக அமைப்புகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதும் மேற்பார்வைசெய்வதும் அதிகரிக்கப்படுவது நியாயப்படுத்தப்படுகின்றது.”*

- **எதிர்வாதம்:** கோவிட்-19 இனது அளவினது ஒரு பொதுச் சுகாதார நெருக்கடியின் போது, தேசிய அதிகாரசபைகளினால் குறிப்பிடத்தக்க அளவீடுகள் நியாயப்படுத்தப்படலாம், சிவில் சுதந்திரங்களும் அடிப்படை உரிமைகளும் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக மதிப்பளிக்கப்படல் வேண்டும். ஆக்கிரமிப்பான பின்தொடர்தல்கள், பிழையான தகவல்களின் அடிப்படையில் கட்டுப்படுத்தல்களும் குற்றச்சாட்டுகள் மற்றும் நீண்ட-கால ஆர்ப்பாட்டத் தடைகள் என்பன நியாயப்படுத்தமுடியாத அரச வெளிப்பாடுகளுக்கு உதாரணங்களாகும். எந்ம அவசரகால அளவீடுகளும் அவசியமானதாக, சமநிலையுடையதாகவும் பாரபட்சமற்றதாகவும் இருத்தல் வேண்டும் என சர்வதேச சட்டமானது கோருகின்றது.[43]

  மேலும் சிவில் சமூகமும் இலாபநோக்கற்றவையும் கோவிட்-19 இற்கு எதிரான போராட்டத்தினை தலைமை வகிப்பதிலும் உலகளாவியரீதியில் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதிலும் முக்கியமானவையாக இருந்துவருகின்றன. “சட்டபூர்வமான இலாநோக்கற்ற அமைப்புகளின் நடவடிக்கைகள் தேவையற்ற வகையில் தாமதிக்கப்படவோ, இடையூறுக்குள்ளாக்கப்படவோ, ஊக்கமிழக்கப்படவோ இல்லை என்பதனை நிச்சயப்படுத்துகின்ற ஆபத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு அணுகுமுறையினை நிதிநிவனங்களும்”[44] அரசாங்கமும் பிரயோகிக்க வேண்டும் என நிதியியல் நடைமுறைச்செயலணியானது வலியுறுத்தியுள்ளது. நிதியியல் நடைமுறைச்செயலணியானது ஒரு பகிரங்கமான முறையில் அதனது திட்டமிட்ட பயனாளிகளுக்கு அதிகளவு தேவைப்படும் உதவியானது கிடைக்கின்றது என்பதனை நிச்சயப்படுத்த பொருத்தமான இலாநோக்கற்ற அமைப்புகளுடன் பணியாற்றுவதற்கு நாடுகளை ஊக்குவிக்கின்றது.[45]

---

40 MainaKiai, Report of the Special Rapporteur on the rights to freedom of peaceful assembly and of association, Human Rights Council, Apr 14, 2014, A/HRC/26/29, https://www.ohchr.org/Documents/Issues/FAssociation/A-HRC-26-29_en.pdf, at para 55.

41 *Id.*

42 *See, e.g.,* the UK, the US, France, Australia and Germany.

43 COVID-19: States should not abuse emergency measures to suppress human rights – UN experts, Mar 16, 2020, UN OHCHR, https://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=25722&LangID=E.

44 FATF Statement 2020, *supra* note 12.

45 *Id.*

## (வரைபு)

## சிவில் சமூக நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டம்

## சிவில் சமூகத்தின் நிலைப்பாடு, கொள்கைகள் மற்றும் மாற்றீடான முன்மொழிவு ஒன்று

நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான சிவில் சமூக நிறுவனங்களின் செயற்பாட்டை மேலும் மட்டுப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் முன்னெடுக்கும் கட்டுப்பாடு மிக்க சட்டங்கள் தொடர்பில் ஆலோசனை செயற்பாடு ஒன்றின் வரிசையை முன்னெடுத்த பின்னர் இதன் கீழ் கையொப்பமிடும் நிறுவனங்களாகிய நாம் எமது நிலைப்பாட்டை முன்வைக்க விரும்புகின்றோம். மேலும், இதன் கீழ் கையொப்பமிடும் நாம் இந்த விடயம் தொடர்பில் எந்தவொரு கலந்துரையாடலுக்கும் ஆரம்ப புள்ளியாக கருத்திற் கொள்ளப்படும் வகையில் தற்போதைய தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் சட்டத்துக்கு (VSSO Act) மேற்கொள்ளப்பட முடியுமான திருத்தங்களின் வரைபு ஒன்றையும் இங்கு அளிக்கை செய்கின்றோம்.

**அறிமுகம் மற்றும் சூழமைவு**

ஆகஸ்ட் 08, 2021 அன்று, பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கி வந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகத்தின் முன்னெடுப்பு என ஊகிக்கத்தக்க வகையில், தற்போதைய தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் சட்டத்துக்கு பதிலாக புதிய அரச சார்பற்ற நிறுவனங்கள் சட்டம் ஒன்றுக்கு வழிவகுக்கும் முன்மொழிவு ஒன்று பாதுகாப்பு அமைச்சினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதற்குரிய அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டது. அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகம் வெளிநாட்டு அமைச்சின் கீழ் மாற்றப்பட்ட பின்னரும், அரச சார்பற்ற நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் வகையில் மிகவும் கட்டுப்பாடு மிக்க சட்டமொன்றை கொண்டு வரும் தொடர் செயற்பாடு நிறுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. சட்ட வரைபு தயாரிக்கும் திணைக்களத்துக்கு இது தொடர்பான சட்டமூல வரைபை தயாரிக்கும் பணி ஒதுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வரைபு, கருதுகோள் குறிப்பு, சட்டக வடிவ ஆவணம் அல்லது இதனை உருவாக்குவதற்குரிய காரணங்கள் மற்றும் அரசாங்கத்தின் திட்டங்கள் போன்ற விடயங்களை விபரிக்கும் எந்தவொரு ஆவணமும் சிவில் சமூகம் இவ்விடயம் தொடர்பில் ஆக்கபூர்வமான ஈடுபாடுகளை மேற்கொள்ளும் வகையில் கிடைக்கவில்லை. உண்மையில், அவ்வாறான எழுத்து மூல ஆவணங்கள் எவையாவது இருப்பின் அவற்றை பகிர்ந்து கொள்ளுமாறு தகவலறியும் சட்டத்தின் ஊடான விண்ணப்பங்கள் உள்ளடங்கலாக பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதும் அவை அனைத்தும் அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டன. குறித்த சட்ட மூலம் வர்த்தமானியில் வெளியிடப்படுதலே அவ்வாறான ஈடுபாட்டை வழங்குவதற்கான முதல் சந்தர்ப்பமாக அமைய வேண்டும் என அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகத்துக்கான பணிப்பாளர் நாயகம் கருதுகின்றாரோ என எமக்கு எண்ணத் தோன்றுகின்றது. அவ்வாறான நிலை ஏற்படும் போது இந்த முன்னெடுப்பினால் பாதிக்கப்படப் போகின்றவர்களால் உரிய ஆலோசனை வழங்க அல்லது ஈடுபாட்டை மேற்கொள்ள உரிய காலம் நிறைவடைந்த பின்னரே அவற்றை காண முடியும்.

தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரும் தனது நோக்கத்தை பணிப்பாளர் நாயகம் பல ஊடக நேர்காணல்கள் மற்றும் ஒன்று கூடல்களின் போது தெரிவித்திருந்தார். மேலும், முன்மொழியப்பட்டுள்ள புதிய சட்டம் பதிவு செய்தல், கண்காணிப்பு, மேற்பார்வை, நிதி முகாமைத்துவம் அத்துடன் பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் குழப்பங்களை அகற்றுதல் போன்ற விடயங்களில் தலையீடுகளை மேற்கொள்ளும் வகையில் அமைந்திருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். ஆரம்பத்திலேயே இது ஒரு துர்க்குறி போன்று தோன்றுவதுடன் தீவிரமான அதிகார மீறலாக அமைகின்றது. ஜனநாயகம் ஒன்றில் சிவில் சமூகத்தின் வகிபாகத்தை பற்றிய தவறான புரிதலை இது பிரதிபலிக்கின்றது என நாம் நம்புகின்றோம். அரசாங்கம் இவ்விடயம் தொடர்பில் கொண்டிருக்க கூடிய கரிசனைகளை தீர்ப்பதற்கு ஏற்கனவே நாட்டில் காணப்படும் சட்டங்கள் மற்றும் வழிமுறைகள் கருத்தில் எடுக்கப்படவில்லை என்றும் தெரிகின்றது. இவ்வாறானதொரு சட்டம் இயற்றப்படும் வேளை, அது சிவில் சமூக நிறுவனங்களின் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளில் தீங்கான தாக்கங்களை ஏற்படுத்துவதுடன் நாட்டில் சிவில் சமூக நிறுவனங்கள் செயற்படுவதற்கு உகந்த சூழலை உருவாக்குதல் என்ற அரசாங்கத்தின் கடப்பாட்டுக்கு முரணான விடயமாக அமையும்.

அரச சார்பற்ற நிறுவனங்களை மேலும் ஒழுங்குபடுத்த அத்துடன் தீவிரமாக கட்டுப்படுத்தும் வகையில்

சட்டங்களை திருத்த மேற்கொள்ளப்படும் இந்த முயற்சியானது வேறுபட்ட அரசாங்கங்கள் காலங்காலமாக இந்நோக்கத்தில் முன்னெடுத்து வரும் முயற்சிகளில் ஒன்றாகவே நோக்கப்படுகின்றது. இது தொடர்பில் கருதுகோள் / வரைபினை உருவாக்குவதற்கு என குழு ஒன்றை நியமித்து இதற்கான முன்னெடுப்பை தற்போதைய அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகம் மேற்கொள்வதாக எமக்கு கூறப்பட்டது. இந்த படிநிலையில் மிகவும் சிவில் சமூக ஒன்றியம் அதிகமான பங்களிப்பை வழங்க நல்லெண்ணத்துடன் முயற்சித்த போதும் உறுதியான திருத்த முன்மொழிவுகளில் நாம் ஈடுபாடு கொள்வதற்கு அதிகாரத் தரப்புகளால் எந்த வித வாய்ப்புகளும் எமக்கு வழங்கப்படவில்லை. இவ்விடயம் தொடர்பான கடந்த கால முன்னெடுப்புகளின் தன்மைகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகம் அரச சார்பற்ற நிறுவனங்களின் பகுதிகளை பொதுவாக அணுகும் முறை என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் போது இம்முன்னெடுப்பு தொடர் செயன்முறையின் விளைவுகள் சிவில் சமூக நிறுவனங்களுக்கு சிறந்ததாகவோ நன்மை பயப்பதாகவோ அமையப் போவதில்லை.

அதே போன்று, தற்போதுள்ள சட்டத்தின் கீழ், சில சமயங்களில் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகம் நடந்து கொள்ளும் விதம் மிகவும் சக்திவாய்ந்த / கட்டுப்பாடுகளைக் கொண்ட புதிய சட்டத்தை அச்செயலகம் எவ்வாறு பயன்படுத்தும் என்பதும் கரிசனைக்குரிய விடயமாக அமைந்துள்ளது. சட்டம் மாத்திரமன்றி, தற்போது காணப்படும் அனுமதிகள், அறிக்கை வழங்குதல் போன்ற விடயங்கள் மிகவும் சுமை தருவனவாக அமைந்துள்ளதுடன் அவை சிவில் சமூக நிறுவனங்களின் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளுக்கு தடையாக அமைகின்றன. இந்த சூழமைவில், அரச அதிகாரிகளுக்கு அதிகமான சட்டக் கருவிகளை வழங்கி அவர்களது அதிகாரத்தை உயர்த்துவது சிவில் சமூக நிறுவனங்களின் மீது அவர்கள் அதிக கட்டுப்பாடு மிக்கவர்களாக மாறுவதற்கு வழி வகுப்பதுடன் அவற்றின் சுயாதீனத்தையும் பாதிப்பதாக அமையும். இது அரச அதிகாரிகள் நியாயமற்ற வகைகளில் நன்மை அடைவதற்கான வழிகளை உருவாக்குவதோடு சிவில் சமூக நிறுவனங்கள் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப அதிகாரிகளுக்கு சேவகம் செய்ய வேண்டிய நிலையை உருவாக்கும்.

முன்மொழியப்பட்டுள்ள சட்டம் மற்றும் கட்டுப்பாட்டு சட்டக வடிவமைப்புகளை நாம் இங்கு கருத்திற் கொள்ளும் அதே வேளை, பாதுகாப்பு படைகள் மற்றும் பொலிசார் மேற்கொள்ளும் ஊடுருவல் மிக்க ஆய்வு மற்றும் உளவு பார்த்தல் தொடர்பில் சிவில் சமூக நிறுவனங்கள் பல ஆலோசனைச் செயற்பாடுகள் மற்றும் கூட்டங்களின் போது சுட்டிக்காட்டியுள்ளன. அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள் காரணம் எதுவும் குறிப்பிடப்படாமல் பல்வேறுபட்ட விசாரணைகளுக்கு அழைக்கப்படும் பல சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் அவர்களின் இடங்களுக்கு பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு போன்ற பொலிஸ் கட்டமைப்பின் வேறுபட்ட பிரிவுகள் விஜயம் செய்வதும் இடம்பெறுகின்றது. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், ஆதரித்து வாதிடல், செய்தி அறிக்கையிடல் மற்றும் சமூக ஊடக கருத்தூட்டங்களில் அரசாங்கத்துக்கு எதிராக கருத்துக்களை வெளியிடுபவர்களுக்கு எதிராக அரசாங்கம் அண்மைய காலம் தொட்டு காண்பிக்கும் நடத்தையை போன்று இந்நடவடிக்கைகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்களை மிரட்டவும் அவர்களை அமைதியாக்கவும் அரசாங்கம் நோக்கத்துடன் மேற்கொள்ளும் நடவடிக்கைகளாகவே இவை தோற்றமளிக்கின்றன. ஊடகவியலாளர்கள் மற்றும் தொழிற் சங்க தலைவர்களுக்கு போன்ற தரப்பினருக்கு மேலதிகமாக வடக்கு மற்றும் கிழக்கில் சிறுபான்மைச் சமூகங்களின் நன்மைக்காக செயற்படும் சிவில் சமூக நிறுவனங்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் இவ்வாறான அச்சுறுத்தல்களினால் பாதிப்புறும் ஏதுநிலை மிக்கவர்களாக உள்ளனர். பெருந்தோட்ட பிரதேசங்களில் செயற்படும் சில சிவில் சமூக நிறுவனங்களும் இவ்வாறான நிலையை அண்மைக்காலமாக எதிர்கொள்கின்றன. சட்டம் மாத்திரமன்றி அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகமும் சிவில் சமூக நிறுவனங்களின் இயக்கத்துக்கான தளம் மற்றும் சுதந்திரங்களில் மீறல்களை ஏற்படுத்தும் நிலை காணப்படுகின்றது. இவை அனைத்தும் எடுத்துக் கூறப்பட்டு முறியடிக்கப்பட வேண்டிய விடயங்களாகவுள்ளன.

**நிலைப்பாடுகள் மற்றும் கொள்கைகள்**

இந்த சூழமைவில், சிவில் சமூக நிறுவனங்கள் செயற்படும் சூழல் ஒன்றை உருவாக்க, அரசாங்கம் இந்த சூழலை மேலும் மோசமாக்க முன்னெடுக்கும் இந்த அண்மைய முயற்சி ஆழமாக ஆராயப்பட வேண்டும் என நாம் நம்புகின்றோம். ஜனநாயகத்துக்கு நன்மை பயக்கும் சுயாதீன செயற்பாட்டாளர்களாக சிவில் சமூக நிறுவனங்கள் தமது வகிபாகத்தை முன்னெடுப்பதற்கு, சிவில் சமூக நிறுவனங்களின் செயற்படு தளத்தை மட்டுப்படுத்தும் சாத்தியம் மிக்க கருவியாக அமையும் சாத்தியம் மிக்க இந்த தீங்கு மிக்க

ஒழுங்குவிதிகளை எதிர்ப்பதை தவிர அவற்றுக்கு வேறு எந்த தெரிவும் காணப்படவில்லை.

எனவே, இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் சட்டம் நிறைவேற்றப்படும் என எதிர்பார்ககப்படும நிலையில் அது தொடர்பான எமது நிலைப்பாடுகள் பின்வருமாறு:

1. சிவில் சமூக நிறுவனங்கள் தொடர்பாக இயற்றப்படும் எந்தவொரு சட்டமும் வழங்கப்பட்ட எந்தவொரு சூழமைவிலும் சிவில் சமூக நிறுவனங்கள் செயற்படுவதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். இதன் மூலமாகவே இயங்கு நிலை மிக்க ஜனநாயகம் நிலவும் நாடொன்றின் பகுதியாக எமது முழுமையான சக்தியுடன் அந்நாட்டின் மக்கள் மற்றும் சூழலுக்கு எமது முழுமையான சக்தியை பிரயோகித்து பணி புரிய முடியும்.
2. பதிவு செய்தல் / கூட்டிணைவு விண்ணப்ப படிவங்கள் சிவில் சமூக நிறுவனங்களுக்கு தற்போது காணப்படும் வடிவத்திலேயே தொடர்ந்து கிடைக்க வேண்டும்.
3. எமது அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டவாறு முறைசார் மற்றும் முறைசாரா ஒருங்கிணைவுக்கான சாத்தியங்கள் இரண்டும் காணப்பட வேண்டும். சிவில் சமூக நிறுவனங்களை பதிவு செய்தல் என்பது அந்நிறுவனங்கள் தன்னார்வமாக மேற்கொள்ளும் விடயமாகவே அமைந்திருக்க வேண்டும்.
4. அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் பொருத்தமான வகையில் பொதுவான சட்டமே காணப்பட வேண்டியதுடன் சுமை மிக்க மேலதிக சட்டங்களால் அரச சார்பற்ற நிறுவனங்கள் தனிமைப்படுத்தப்படக் கூடாது. நாட்டில் உள்ள அனைத்து நிறுவனங்கள் / குடிமக்களுக்கு பிரயோகம் மிக்க சட்டங்களே சிவில் சமூக நிறுவனங்களுக்கு பிரயோகிக்கப்படும் என்ற சமத்துவம் மிக்க தன்மை மற்றும் சிவில் சமூக நிறுவனங்ளின் இவ்விடயம் மீதான விருப்பு என்பன கருத்திற்கொள்ளப்பட வேண்டும் (இச்சட்டங்களுக்கான உதாரணங்களில் தண்டனை சட்டக் கோவை, 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பயங்கரவாத நிதி முடக்கல் சட்டம் பற்றிய ஒப்பந்தம், 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பயங்கரவாத நிதி முடக்கல் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணம் தூய்மைப்படுத்தல் சடடம், தொழிலாளர் தொடர்பான வேறுபட்ட சட்டங்கள் அத்துடன் கடை மற்றும் அலுவலகம் சட்டம் என்பனவும் உள்ளடங்குகின்றன).
5. இந்த சட்டங்கள் குறித்த சட்டங்களை பிரயோகிக்க பணிப்பாணை வழங்கப்பட்ட நிறுவனங்களாலேறே அச்சட்டங்கள் நிருவகிக்கப்பட வேண்டும். தன்னார் சமூக சேவை நிறுவனங்கள் சட்டம் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் சட்டம் சாத்தியமான சட்டத்துக்கு முரணான அல்லது சட்டவிரோத நடவடிக்கைகளை கண்காணிக்கும் அல்லது ஒழுங்குபடுத்தும் சட்ட உபகரணமாக பயன்படுத்தப்படக் கூடாது.
6. பதிவு செய்தல் அல்லது மேற்கொள்ளப்பட்ட பதிவை பேணுவதற்கு அவசியமான மேற்பார்வை செய்தல் மாத்திரமே சட்டத்தினால் உருவாக்கப்படும் அரச நிறுவனத்தின் செயற்பாடாக அமைந்திருக்க வேண்டும். மாறாக, பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் பதிவுத் தேவைப்பாடுகளை விரிவாக்குதல், அவற்றின் செயற்பாடுகள் மற்றும் இயக்கத்தை கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் வகிபாகங்கள் அவ்வமைப்பின் பணிகளாக அமைந்திருக்க கூடாது. உருவாக்கப்படும் அமைப்பு பொருத்தமான அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். இவ்வமைப்பிடம் எதிர்பார்க்கப்படும் செயற்பாடுகள் மற்றும் வகிபாகம் தொடர்பில் நாடளாவிய ரீதியில் சிவில் சமூக நிறுவனங்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் சுருக்க ஆவணம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் சட்டத்துக்கு ஏற்படுத்தப்பட வேண்டிய திருத்தங்களின் வரைபும் இவ்வாவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
7. தற்போது காணப்படும் சட்டத்துக்கு ஏற்படுத்தப்படும் எந்தவொரு திருத்தம் அல்லது புதிதாக உருவாக்கப்படும் சட்டம் ஜனநாயகம் ஒன்றின் அத்தியாவசியமான பகுதியொன்றான சிவில் சமூக நிறுவனத் துறை கொண்டுள்ள சுதந்திரத்தில் தாக்கங்களை ஏற்படுத்தும் தேவைப்பாடுகளை உள்ளடக்கலாகாது. அத்துடன், புதிய முன்னெடுப்புகள் அரச அமைப்புகள் சாத்தியமான வகையில் நியாயமற்ற வகையில் நன்மைகளை அடைந்து கொள்ளும் வகையில் அல்லது சிவில் சமூக அமைப்புகள் மீது கட்டுப்பாடுகளைக்

கொண்டிருக்க வழிவகுக்கும் எந்த தேவைப்பாடுகளையும் கொண்டிருக்க கூடாது.

8. அரச சார்பற்ற நிறுவனங்களை பதிவு செய்தல், அவற்றின் ஆட்சி, தர மேம்பாடு போன்ற விடயங்களை சர்வதேச சிறப்பு நடவடிக்கைகளை பிரதிபலிக்கும் வகையில் சுயாதீனமான ஆணைக்குழு அல்லது அமைப்பினால் கையாள்வது அரச திணைக்களம் ஒன்றினால் கையாளப்படுவதை விட சிறப்பானதாகும். சில அம்சங்கள் சர்வதேச சிறப்பு நடவடிக்கைகளை பிரதிபலிக்கும் வகையில் சுய ஒழுங்குபடுத்தல் பொறிமுறைகள் மற்றும் இத்துறையின் நடத்தைக் கோவைகள் என்பவற்றின் மூலம் கையாளப்படுவது சிறந்தது.

அரச சார்பற்ற நிறுவனங்களை கட்டுப்படுத்தும் எந்தவொரு புதிய சட்டம் அல்லது இது தொடர்பில் ஏற்கனவே காணப்படும் சட்டங்களுக்கு மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் எவையும் பின்வரும் *முக்கிய கொள்கைகளை* பின்பற்றியனவாக அமைந்திருக்க வேண்டும்:

1. ஒருங்கிணைதல் மற்றும் ஒன்று கூடல் சுதந்திரங்கள் மீதான கௌரவம்
2. அரச சார்பற்ற நிறுவனங்களை சமமாக நடத்துதல் மற்றும் அவற்றின் மீது பாகுபாடு காண்பிக்காமை
3. வெளிப்படுத்தல் சுதந்திரம் மீதான கௌரவம்
4. இத்துறையின் சுயாதீனம் மீதான கௌரவம் - விழுமியங்கள், திட்டமிடல்கள் மற்றும் ஒன்றியங்களின் பணி புரியும் முறைமைகள் என்பவற்றை அரசாங்கம் அல்லது ஏனைய தரப்புகளின் தலையீடுகள் இன்றி உரிய அமைப்புகளாலேயே தீர்மானிக்கவும் முடிவெடுக்கவும் உள்ள சுதந்திரம்
5. தன்னார்வ அடிப்படையில் பகிரப்பட்ட நலன்கள் தொடர்பில் வலையமைப்பாக்கம், தொடர்பாடல் மற்றும் ஒத்துழைத்தல் என்பவற்றுக்கான உரிமை மீதான கௌரவத்தை மதித்தல்
6. ஒன்றியங்கள் நிதிகள் மற்றும் வளங்களை சட்டரீதியான வகையில் அணுகுவதற்கான இயலுமை என்பது ஒருங்கிணைவதற்கான சுதந்திரத்துடன் இணைந்த மற்றும் அதன் அத்தியாவசியமான பகுதி என்பதை அங்கீகரித்தல்
7. சிவில் சமூக நிறுவனங்கள் செயற்படுவதற்கு உகந்த சூழல் ஒன்றை வழங்குவது அரசாங்கத்தின் கடமை மற்றும் பொறுப்பாக அமைகின்றது. இலங்கையின் சூழமைவில் இது அரசிடம் இருந்து நேர்மறையான மற்றும் எதிர்மறையான பொறுப்புகளை கோரியதாகவே அமைகின்றது.
8. பல்வகைத்தன்மை மிக்க, வினைத்திறன் கொண்ட மற்றும் உற்சாகமான சிவில் சமூகம் அபிவிருத்தியில் முக்கிய வகிபாகம் ஒன்றைக் கொண்டிருப்பதுடன் செயற்படும் ஜனநாயகம் ஒன்றின் அவசியமான அம்சமாக உள்ளது என்பதற்கு கௌரவம் வழங்குதல்.
9. சிவில் சமூக நிறுவனங்கள் மீதான அரச கொள்கைகள் மற்றும் சட்டங்கள் என்பன சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப அமைவதுடன் எமது அரசியலமைப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை பேணியனவாகவும் மனித உரிமைகள் நாம் கொண்டுள்ள சர்வதேச கடப்பாடுகளுக்கு ஒத்திசைவானவையாகவும் அமைந்திருக்க வேண்டும்

**மாற்று முன்மொழிவு**

தற்போதைய தன்னார்வ சமூக சேவைகள் சட்டத்துக்கு நாம் பரிந்துரை செய்யும் திருத்தங்களை இத்துடன் ஒரு முன்மொழிவு வரைபாக நாம் சமர்ப்பிக்கின்றோம். இவ்விடயம் சம்பந்தமான எந்தவொரு கலந்துரையாடலுக்குமான ஆரம்ப புள்ளியாக இந்த ஆவணம் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

இதன் கீழ் கையொப்பமிடும் நாம் மேற்கூறப்பட்ட நிலைப்பாடுகள், கொள்கைகள் மற்றும் மாற்று வரைபு என்பவற்றின் மீது கடப்பாடு மிக்கவர்களாக உள்ளோம். இது அரசாங்கதுடன் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பு பட்ட சட்டங்கள் மற்றும் கட்டுப்பாட்டு சட்டக வடிவமைப்பு தொடர்பில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு ஆதரித்து வாதிடல்,ஈடுபாடு, ஆதரவு திரட்டல் செயற்பாடுகளுக்கு அடிப்படையாக அமையும்.

கையெழுத்திடும் நிறுவனங்கள்

1.
2.